



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்**
**ஆன்றாரோடு ஒப்பர் நிலத்து.**

**பொருள் :** செவியுணவாகிய கேள்வியினை உடையவர் நிலத்தில் வாழ்கின்றவராயினும் தேவரை ஒப்பர். (413)

**கற்றில னாயினும் கேட்க வஃதொருவற்கு**
**ஒற்கத்தின் ஊற்றாந் துணை.**

**பொருள் :** கேள்வி ஒருவனுக்குத் தளர்ச்சி வந்த காலத்தில் ஊன்றுகோல் போன்ற துணையாதலால் ஒருவன் நூல்களைக் கற்றறியானாயினும் அவற்றின் பொருள்களைக் கற்றறிந்தார் சொல்லக் கேட்பானாக. (414)

---

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*

## ஔவையார் திருமொழி



அறஞ்செய விரும்பென ஔவையார் தந்த
சிறந்த திருமொழி தீவினை தெறுமே 01

ஆறுவது சினமெனு மரிய மந்திரங்
கூறுவார் நாவிற் குலவுஞ்சொல் லணங்கே 02

இயல்வது கரவே லெவரே யாயினும்
பயில்வுறப் பயில்வுறப் பாவங் கெடுமே 03

ஈவது விலக்கே லெல்லாந் தந்து
சேவைகள் செய்யத் திறங்கொடுக் கும்மே 04

உடையது விளம்பே லுணர்வார்க் கெல்லாந்
தடையிலா வான்ம சக்தியீ னும்மே 05

ஊக்கமது கைவிடே லூழ்வினை நீக்கும்
தேக்குமா னந்தஞ் சித்தியுந் தருமே 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 329



2025 **பொருளடக்கம்** வைகாசி


| | | |
|---|---|---|
| அசலாக நாம் வாழ... | கே.எஸ். சிவஞானராஜா | 01 - 03 |
| நம்பிக்கை ஊட்டும்... | ஆ.தா.இ. ஜெயபாலன் | 04 - 05 |
| திருக்கயிலாயம் | வி. செல்வரெத்தினம் | 06 - 08 |
| பெரியபுராணம் பூசனார்... | செ. சிவபாதம் | 09 - 12 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 13 - 14 |
| நம்ப நட நம்பி நடவாதே | மு. செல்லத்தம்பி | 15 - 17 |
| திருவடிப் பெருமை | செ. பாலச்சந்திரன் | 18 - 20 |
| வளங்களும் வாழ்வும் | இராம. ஜெயபாலன் | 21 - 24 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 25 - 32 |
| தில்லைக் கூத்தனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 33 - 36 |
| வாழ்வாவது மாயம்... | பு. கதிரித்தம்பி | 37 - 38 |
| மனம் ஒரு குரங்கு | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 39 - 40 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 41 - 44 |
| திருப்புகழைக் கற்றார்... | துரை. கணேசமூர்த்தி | 45 - 47 |
| அகவை 60 காணும்... | பேரவையினர் | - 48 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

சந்நிதியான் ஆச்சிரம

சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்
# சித்திரை மாத வெளியீடு

## வெளியீட்டுரை:

ஞானச்சுடர் 328ஆவது மலருக்குரிய வெளியீட்டுரையினை இளைப்பாறிய கிராம சேவையாளர் திரு க. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் ஆற்றினார்கள்.

அவரது உரையில் எம்பெருமானுடைய இந்த வளாகத்திலே இந்த ஆச்சிரமம் சிறப்பாக அமையப்பெற்றது சைவ சமயத்தவர்களாகிய நாங்கள் கொண்டதொரு நல்வினை என்றுதான் கூறவேண்டும். அந்த வகையிலே இந்த ஆச்சிரமத்தில் பல பணிகளை மேற்கொண்டு சமுதாயத்திற்கு என்ன பணிகள் வேண்டுமோ அதற்கு மேலாக மோகனதாஸ் சுவாமிகள் ஆற்றிவரும் பணிகளை நீங்கள் அறிவீர்கள். அதற்கு அமைவாக மிகவும் சிறந்த பணியாகக் கருதப்படுவது அன்னதானப்பணி. ஏனென்றால் ஆச்சிரமத்திலே குறிப்பிட்டதொருவரது பசியைப் போக்குவது மிகவும் உயர்ந்த தர்மம் ஆகும். அந்தவகையில் எல்லோருடைய பசியைப் போக்கி சிறந்த அன்னதானப் பணியை நித்திய அன்னதானப் பணியாக இங்கே ஆற்றி வருகின்றமை மிகவும் சிறப்பானதாகும். அத்தோடு இல்லாமல் வாழ்வுக்கு உகந்ததும் மிகவும் அவசியமானது அறிவு. அந்த அறிவை ஞானச்சுடர் வழியாக வழங்கி வருகின்ற அந்தப் பேற்றினை நாங்கள் இங்கே எல்லோரும் பெற்றிருப்பது நாங்கள் பெற்றபேறுதான் என்று சொல்ல வேண்டும்.

அதனடிப்படையில் இந்த ஞானச்சுடர் சிறந்த ஆக்கங்களையும் பிரசுரித்து சைவ சமயத்திற்குள்ளே மிக முக்கிய ஆவணமாக விளங்குவதோடு தற்போது ஏற்பட்டுள்ள மத மாற்றங்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கக் கூடியதுமான ஒரு அரும்பெரும் சேவையை ஆற்றி வருகின்றது.

ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டுப் பேரவையினை பாராட்டாமல் இருக்க முடியாது. அந்தளவுக்கு அதன் பணிகள், சமூகப்பணிகள், கல்விப் பணிகள், மருத்துவப் பணிகள், வாழ்வாதாரப் பணிகள் என ஒருங்கே மேற்கொண்டுவரும் ஆச்சிரமத்தின் இச் சேவையை உண்மையிலே எங்களால் மறக்கமுடியாது.

இவ்வாறான நிலையிலே 28 வருட காலமாக தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்ற இந்த ஞானச்சுடர் இன்றைய தினம் 328ஆவது இதழாக வெளியிடப்பட இருக்கின்றது. இம் மலரில் ஆச்சிரமத்தின் வெளிப்படைத் தன்மையை விளக்கும் வகையிலே உள்ளதை நாம் காணலாம்.

இவ்வாறான பணிகளை தன்னலம் கருதாது செவ்வனே ஆற்றிவரும் சுவாமிகள் அவர்களையும் அவரோடு இணைந்த தொண்டர்களையும் இந்த நேரத்தில் மிகவும் பணிவாக பணிந்து வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதிப்பீட்டுரை:

ஞானச்சுடர் சித்திரை மாத மலருக்குரிய மதிப்பீட்டுரையினை சிரேஷ்ட சட்டத்தரணியும், பதில் நீதிவானுமாகிய திரு சோ. தேவராஜா அவர்கள் நிகழ்த்தினார்.

அவர் தம் உரையில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதாந்தம் வெளியிடப்படும் ஞானச்சுடர் மலர் வெளியீட்டு நிகழ்வுக்கு உங்களையும் என்னையும் அழைத்த அனைவருக்கும் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

328ஆவது மலராக மாதாந்தம் தொடர்ந்து வெளிவரும் இவ் ஞானச்சுடர் சைவத்திற்கும் தமிழிற்கும் ஒரு வழிகாட்டியாகும். நாங்கள் வணக்கம் சொல்லுகின்றபோது இரண்டு கைகளையும் ஒன்றாகச் சேர்த்து ஒருவருக்கு வணக்கம் செலுத்துவோம். அப்போது எங்களது 10 விரல்களும் ஒன்றாக இணைவதை நாம் பார்க்கின்றோம். எனவே நாம் ஒன்றுபட வேண்டும். ஒன்றுபட்ட வாழ்வுதான் நன்று. ஆகவே நாங்கள் ஒன்றுபட வேண்டும்.

எங்களுடைய தமிழ் செந்தமிழ், பைந்தமிழ் அழகு தமிழ் திருக்குறள், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, கம்பராமாயணம் என அத்தனை காப்பியங்களைத் தந்திருக்கின்றது. இவையெல்லாம் தமிழின் தொன்மையின் வரலாற்றுக்களை எடுத்தியம்புகின்றது. அதேபோல் இவ் ஞானச்சுடரும் வருங்கால சந்ததியினருக்கு ஒரு காப்பியமாக அமையும்.

இம் மலரில் உள்ள கட்டுரைகள் ஒவ்வொன்றினதும் தரங்களை சபையில் உள்ளோர்க்கு சிறந்த முறையில் மதிப்பாய்வுடன் விளக்கினார். ஆச்சிரமம் ஆற்றும் சமூகப் பணிகள் காலத்தின் தேவையுணர்ந்து ஆற்றப்படும் பெரும் பணியாகும். ஆனால் நாங்கள் மருத்துவராக, பொறியியலாலராக, வழக்கறிஞராக, கணக்காளராக வருவதற்கு ஆசைப் படுகின்றோம். எங்களுடைய பெற்றோர்கள் பிள்ளைகளை இவ்வாறு சொல்லியே வளர்க்கின்றார்கள். பிள்ளைகளை மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனப்பான்மையை சொல்லி வளர்ப்பதற்கு தவறிவிடுகின்றனர். இதனாலேயே இளம் சந்ததியினர் பாதைமாறி தடம் மாறி இருப்பதற்கு வழி வகுக்கின்றது. இந்நிலை மாறவேண்டும்.

இறுதியாக மலரில் இடம்பெற்ற ஒரு சில கட்டுரைகளின் தன்மைபற்றி அவையில் இருந்த அடியார்களுக்கு விளக்கிக்கூறியதோடு ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையினை ஆற்றுவதற்கு சந்தர்ப்பத்தை தந்த சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளையும் சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்க்கும் சிரம்தாழ்த்தி வணங்கி தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

அதனைத் தொடர்ந்து ஆச்சிரமத்தின் சமுதாயப் பணிகளின் வரிசையில் வறுமைக் கோட்டின்கீழ் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன தொடர்ந்து சிறப்புப்பிரதிகள் வழங்கப்பட்டதுடன் அன்றைய நிகழ்வுகள் இனிதே நிறைவு பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஆரம்பித்த காலத்தில் இருந்து வருடா வருடம் வரும் வைகாசி மாத பூரணையை ஒட்டி வைகாசிப் பெருவிழா என்னும் ஒரு நிகழ்வை நடாத்திக் கொண்டிருக்கின்றது. அந் நிகழ்வின்மூலம் பலவிதமான சமூக சமய செயற்பாட்டாளர்களை இனங்கண்டு அவர்களை கௌரவிக்கும் முகமாக அழைத்து பேரவையால் தெரிவு செய்யப்பட்ட "ஞான பண்டித" என்னும் அடைமொழியுடன் கூடிய அவர்களது செயற்பாட்டின் தன்மை கருதி ஒரு விருது வழங்கிக் கௌரவித்து வரும் நிகழ்வானது ஒரு நடைமுறையில் உள்ளது.

இதன் அடிப்படையில் ஆரம்ப காலங்களில் ஒவ்வொரு வருடமும் தொடராக நடைபெற்ற இந் நிகழ்வானது நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக கௌரவிப்பு நிகழ்வை தவிர்த்து விழாவை மட்டும் அடக்கமாகவும் ஆடம்பரமின்றியும் ஆச்சிரம வளாகத்தில் நடைபெற்று வருகின்றது. ஆரம்ப காலங்களில் ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய வீதியில் இடம்பெற்ற இந் நிகழ்வானது இப்போது ஆச்சிரம மண்டபத்தில் கௌரவிப்பு நிகழ்வு தவிர பிற நிகழ்வுகளுடன் நடைபெற்று வருவது யாவரும் அறிந்த விடயம்.

இதன் அடிப்படையில் 10.06.2025 செவ்வாய்க்கிழமை பூரணையன்று காலை சந்நிதியான் ஆச்சிரமத்தில் இந் நிகழ்வை நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளோம். அதன் அடிப்படையில் மாதாந்தம் இடம்பெறும் திருவாசக முற்றோதலுடன் திரு நா. நவராஜ் அவர்களின் சொற்பொழிவும், ஞானச்சுடர் மலருக்கு ஆக்கங்களை வழங்கிய எழுத்தாளர்களையும் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இதன் பிரகாரம் ஆக்கங்களை வழங்கியோர் ஆச்சிரமத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி பேரவையினால் வழங்கப்படும் கௌரவத்தினை பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு:**

**2020ஆம் ஆண்டு தொடக்கம் 2024ஆம் ஆண்டுவரை வெளிவந்த ஞானச்சுடர் மலரில் இடம்பெற்ற ஆக்கங்களை எழுதிய கட்டுரையாளர்கள் அனைவரையும் அன்றைய தினம் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**-பேரவையினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**Dr T. ஸ்ரீஸ்கந்தராசா**
(லண்டன்)
**பொ. கஜேந்திரகுமார்**
(யாழ்ப்பாணம்)
**ச. கந்தசாமி**
(தேவன் ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)
**மா. நாகலிங்கம்**
(லக்ஷ்மி வெதுப்பகம், பத்தமேனி, அச்சுவேலி)
**க. அரியரத்தினம்**
(கதிர் தொலைத்தொடர்பு நிலையம், வல்வெட்டி)
**கா. அருந்தவராசா**
(பிரதானவீதி, தொண்டைமானாறு)
**சி. தங்கவேல்**
(கேம்பிரிட்ஜ் கல்வி நிறுவனம், நவிண்டில்)
**திருமதி கி. தெய்வநாயகி**
(மீசாலை)
**நா. சுந்தரம்**
(இளைப்பாறிய பிராந்திய நிர்வாக அலுவலர், உரும்பராய்)
**ந. நற்குணராசா**
(தாதி உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை)
**P. சாந்தரூபன் G.S**
(சாருகாந் தொலைத்தொடர்பு நிலையம், கெருடாவில்)
**திருமதி இ. லோகநாதன்**
(இளை. பொது முகாமையாளர், மானிப்பாய்)
**Dr V. பாலகிருஷ்ணன்**
(கரவெட்டி)
**இ. கணேசலிங்கம்**
(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால்)
**வீ. நடராசா**
(சாவகச்சேரி)
**சி. கஜன்**
(சண்டிலிப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**S. இராசரத்தினம்**
(இளை. பிரதேச அத்தியட்சகர், நீர்வேலி)
**த. விக்னேஸ்வரன்**
(தங்கராசா நகை மாளிகை, யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(சுந்தரம் பிறதேர்ஸ் மருந்துக்கடை, திருநெல்வேலி)
**K. அருள்வேல்**
(விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)
**ஆ. குலேந்திரநாயகம்**
(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால்)
**செ. கஜேந்திரன்**
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
**ஐ.கோ. சந்திரசேகரம்**
(யாழ்ப்பாணம்)
**வ. வயிரவநாதன்**
(நீர்வேலி)
**செல்வி பா. ரதிவதனி**
(மாயக்கை, தம்பசெட்டி)
**சு. மகாராஜன்**
(வட்டுக்கோட்டை)
**மாணிக்கம் குட்டித்தம்பி**
(வல்லியாவத்தை, கரணவாய்)
**திருமதி சீ. ஆதவன்**
(வல்லிபுரக்கோவில் வீதி, புலோலி)
**ம. மதியுகன்**
(அரியாலை)
**பேரின்பபாலசுப்பிரமணியராசா கபிலேஷன்**
(குப்பிளான்)
**ஐ. புவனேஸ்வரன்**
(அச்சுவேலி)
**நி. ஜெயந்தன்**
(மங்கை ஸ்ரோர்ஸ், நீர்வேலி)
**சு. சந்திரலிங்கம்**
(ஆனைக்கோட்டை)
**பாலகுரு விமலேந்திரன்**
(குரு பிறிண்ரேஸ், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொ. கந்தையா**
(புருடிலேன், அரியாலை)
**செ. கிருஷ்ணராஜா**
(கலட்டி வீதி, கோண்டாவில்)
**வை. சிற்றம்பலம்**
(தேவி வாசம், கொக்குவில்)
**சி. யோகராசா**
(தெல்லிப்பழை)
**வரதலிங்கம் செல்வமோகன்**
(மோகன்கடை, ஆவரங்கால்)
**திருமதி கண்மணி கணபதிப்பிள்ளை**
(பத்தமேனி, அச்சுவேலி)
**தா. தர்மலிங்கம்**
(கொக்குவில்)
**த. கணேசலிங்கம்**
(தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ், ஆனைக்கோட்டை)
**ம.செ. சபாநாயகம்**
(மாலிசந்தி, கரவெட்டி)
**K. வேணுகோபாலு**
(வேணி இல்லம், புலோலி)
**S. மிகிந்தலா**
(கரவெட்டி)
**திருமதி S. உமாரதி**
(மங்கை இல்லம், உடுப்பிட்டி)
**செ. ஸ்ரீதரன்**
(விமலவாசா, உச்சில் ஒழுங்கை, கரவெட்டி)
**சி. மதியழகன்**
(திக்கம், அல்வாய்)
**ஜெகநாதன் ஜனனி**
(யாழ்ப்பாணம்)
**ஐ. சிவஞானம்**
(கமலவதி, கரவெட்டி)
**அ. சின்னத்தம்பி**
(மாய்க்கிராயன், துன்னாலை)
**கதிரவேலு சதாசிவம்**
(அந்திரான், கரவெட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**த. முருகானந்தா**
(பிரம்படிலேன், கொக்குவில்)
**A.T. கதிரவேல்**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
**த. யாழினி**
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
**ஆறுமுகம் மயில்வாகனம்**
(இணுவில் கிழக்கு)
**வே. பாண்டியர்**
(கைதடி தெற்கு)
**வ. இராசையா**
(இருபாலைவீதி, கோப்பாய்)
**சோ. இராசலிங்கம்**
(ஆவரங்கால் கிழக்கு)
**சி.க. இராசரெத்தினம்**
(பத்தமேனி, அச்சுவேலி)
**K. குலரெட்ணம்**
(நவாலி வடக்கு, மானிப்பாய்)
**சி. பாலபாரதி**
(கற்கோவளம், பருத்தித்துறை)
**சு. பானுஜா**
(துன்னாலை, கரவெட்டி)
**ச. தெட்சணாமூர்த்தி**
(கோண்டாவில்)
**ஜெயசந்திரபோஸ் இந்திராணி**
(அச்சுவேலி)
**க. கௌரீஸ்வரி**
(அரியாலை)
**சி. ஜெயராணி**
(இணுவில்)
**க. சந்திரகுமார்**
(நீர்வேலி)
**மு. பிரதாஸ்**
(மல்லாகம்)
**க. பொன்னுச்சாமி**
(கரவெட்டி)
**க. ஆறுமுகநாதன்**
(வட்டுக்கோட்டை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசலாக நாம் வாழ விசுவாச(க)மாய்ப் பிறக்கும் விசுவாவசு புதுவருடப்பிறப்பு

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

தமிழர்களது பண்டிகைகளுள் தித்திக்கும் பண்டிகை சித்திரைப் புத்தாண்டாகும். இன மத மொழி பேதங்கடந்து, இலங்கையில் கொண்டாடப்படுகின்ற ஒரு அதிசயமான பண்டிகை சித்திரைப் புத்தாண்டாகும். வையத்துள் வாழ்வாங்கு வாழ தமிழர்களும் ஏனைய வர்களும் தம்மைப் புதுப்பித்துக்கொள்ளும் புத்தாண்டாக, "விசுவாவசு" புதுவருடம், குதூகல, ஆனந்த, ஞான - வரங்களோடு, 14.04.2025 ஞாயிற்றுக்கிழமை பின்னிரவு 2.29இற்குப் பிறந்தது.

வாக்கிய பஞ்சாங்கத்தின் பிரகாரம் அபரபக்க பிரதமை திதியில், சுவாதி நட்சத்திர முதலாம் பாதத்தில், வச்சிரம் நாம யோகத்தில், கவுலவக் கரணத்தில், மகர லக்கினத்தில், கன்னி நவாம்சத்தில், செவ்வாய் காலவோரையில், புதன் சூக்குமவோரையில், சாத்விக குண வேளையில், நட்சத்திர பட்சியாகிய காகம் துயிலும் சூக்கும பக்ஷி நடைத்தொழிலும் செய்யும் காலத்தில் இப் புதிய விசுவாவசு வருடம் பிறந்தது.

இப்புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் ஆலிலையும், காலில் இலவமிலையும் வைத்து, சிவப்பு நீல நிறப் பட்டாடையாயினும் தரித்து, நீலக்கல் மாணிக்க சாதாரண ஆபரணமணிந்து, சுகந்த சந்தணம், நறுமலர் மாலை புனைந்துசூடி, விக்கினேஸ்வர வழிபாடாற்றி, இயன்ற தான தருமங்களை எண்ணியும் இயற்றியும், மாதா பிதா குரு தெய்வ மூத்தோர் வழிபாடாற்றி அவர்களின் ஆசிபெற்று, உற்றார் உறவினர் நண்பர்கள் அயலவர்கள் சிறுவர்கள் ஆகியோருடன் அளவளாவி, அறுசுவை உணவு பலகாரங்களை அன்றாவது வீட்டிலே தயாரித்து, சுக்கு - திற்பிலி - மிளகு - அப்பம் சேர்த்தருந்தி, தாம்பூலந்தரித்து, கண்ணாடியில் முகதரிசனஞ் செய்து, புதிய வருட பலன்களை வாசித்துக் கேட்டும் உணர்ந்தும், சமயத் தோத்திரங்களைப் பாராயணம் செய்தும் மங்களகரமாக வாழக் கடவர்.

மறுநாளாகிய 14.04.2025 திங்கட்கிழமை வைகறையில் துயிலெழுந்து, தூயமனதோடு, கடவுளை வழிபாடாற்றி, முன்பு செய்த பழி பாவ கண்ணூறு கண்டன தண்டனைகளிலிருந்து விடுபட்டு, மேற்கொண்டு செய்யவேண்டிய அறம் பொருள் இன்ப தவப்பேறுகளை மனத்திலிருத்தி, மங்கலப் பொருட்களைத் தொட்டுணர்ந்து, நித்திய கர்மானுஷ்டானங்களை நிறைவேற்றி, அவரவர் வீடுகளிலே முற்றத்தில் கோலமதை அரிசிமாவினால் மெழுகியதன்மேல் கோலம்போட்டு, நிறைகுடம் குத்துவிளக்கு வரமாக்கி, பொங்கல் ஆக்கி சூரிய அட்ட திக்குபாலகர்கள் தேவர்கள் தரிசனமாகும்படி படைத்து, தூப தீப ஆராதனை வழிபாடுசெய்து, காகம் முதலான பறவைகள், கால்நடைகள் குறிப்பாகப் பசுவுக்கு கோமாதா புண்ணியாயுபகாரம் ஈந்து தாகமகற்றி எளிமையாக வாழவே இயற்கை எமக்காக இரங்கி வரமாகிறது.

*விவேகமும் நற்குணமும் வாழ்க்கை வண்டியின் இரு சக்கரங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுமாடென்னும் செல்வம் பாரெங்கும் கொழிப்பதுபோல
விசுவாவசு புதுவருடம் பிறக்கிறதே - விசுவாசமாய்
கடமைதான் கடவுளெனக் காலத்தைப் பேறாக்கினால்
கொடுமை பறந்தோடும் பார்.

மாற்றமொன்று அரங்கேறியபின்பு விசுவாவசு வருடம் பிறக்கிறது. இலங்கையின் ஜாதகத்தில், சமய - சமூக - பொருளாதார மற்றும் சட்ட திட்டக் கோட்பாடுகளில் பாரிய மாற்றம் ஏற்பட வாய்ப்பும் வளமும் உண்டு. அதனைப் புதுவருடம் நல்கும்.

யாவும் எல்லோருக்கும் சித்திக்க மருத்துநீர் தேய்த்துக் குளிப்பது சாலச் சிறந்ததாகும். எவ்வாறெனின், கீழ்க்கண்டவாறு மருத்துநீரைத் தயாரிக்கவும். தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார், செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பிலி, சுக்கு ஆகியவற்றைச் சுத்த சலத்தில் இட்டு கொதிக்கக் காய்ச்சி ஆறியபின் சிரசிலிட்டுக் குளிக்க வேண்டும். தொண்ணூறு வீதமானவர்கள் மருத்துநீரைத் தயாரிப்பதே இல்லை. உரியவாறு தயாரிக்காத இடங்களில் வாங்கி தோஷங்களைச் சம்பாதித்துக்கொள்கிறார்கள். இந்நிலை புதுவருடத்தில் ஊன்றிக் கவனிக்கப்படுதல் நன்மை பயக்கும்.

மேலும் சங்கிரம தோஷ நட்சத்திரங்களான திருவாதிரை, சித்திரை 3ஆம் 4ஆம் கால்கள், சுவாதி, விசாகம், 1,2,3ஆம் கால்கள், சதயம், பூரட்டாதி 4ஆம் கால், உத்தரட்டாதி, ரேவதி ஆகியவற்றில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானஞ் செய்வது பிரதானமாகும். தோஷ நிவர்த்தி பெறலாம்.

மிகவும் முக்கியமான கைங்கரியமாக இடம்பெறுவது கைவிசேடம் என்ற பண முகாமைக்கான உபகார முதலீடாகும். இந் நிகழ்வானது பண முகூர்த்த வாழ்வுக்கான அடித்தளமாகும்.

கைவிசேடம், சித்திரை மாதப் பிறப்பன்றே, பகல்வேளை
14.04.2025 காலை 09.09 - 09.56 வரை
14.04.2025 காலை 09.59 - 10.31 வரை
14.04.2025 மாலை 04.06 - 05.00 வரை செய்துகொள்ள முடியும்.

மேலும், 16.04.2025 புதன்கிழமை பகல்வேளை
காலை 09.04 - 09.48 வரை
காலை 09.52 - 11.46 வரை செய்துகொள்ள முடியும்.

உற்றார் உறவினர் விருந்து, சித்திரை முதலாம் திகதி பகல், 09.59 தொடக்கம் 10.31 வரை கொண்டாட முடியும்.

இதேபோல குரு ராஜ சினேக தரிசனம், வித்தியாரம்பம், ஏர்முனை கைங்கரியம், பூமிப்பிரவேசம், கிரஹப்பிரவேசம், நெல் விதைத்தல், சூடு மிதித்தல், தானியம் பயிரிடுதல், வான்பயிர் நடுதல், வியாபாரம் ஆரம்பித்தல், புதுக்கணக்கு ஆரம்பித்தல், குடில் வைத்தல், மாட்டுக்குக் குறியிடல், நுகம் வைத்தல், நாணயம் பூட்டல், அன்னமூட்டல், புதிருண்ணல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணறு குளம் தோண்டல், சீமந்தம் செய்தல், காது குற்றுதல், பிரயாணம் செய்தல், தீட்சை வைத்தல், உபநயனம் செய்தல், விவாக ஒப்பந்தம், வீட்டுக்கு அத்திபாரமிடுதல், தேவப் பிரதிஷ்டை செய்தல், ஓலை வெட்டுதல், வேலியடைத்தல் ஆகிய சுபகாரியங்களுக்கு புதுவருட பஞ்சாங்க முகூர்த்த நாட் குறிப்பர்.

விசுவாவசு வருடமானது:-

விசுவா வசுவருஷம் வேளாண்மை யேறும்
பசுமாடு மாடும் பலிக்கும் - சிசுநாசம்
மற்றையரோ வாழ்வர்கண் மாதவங்கள் மீறுமே
உற்றுலகில் நல்லமழை உண்டு.

மேலும் வறுமை நீங்க வழிகள் பல திறக்கப்பட்டு, சுயபொருளாதார விருத்திக்கு வழி சமைக்கப்படும். இதன்மூலம் 60,00,000 இலட்சம் பேரின் வருமானம் அரச மான்மியமோடு பிரம்மாதமாகும்.

இதைவிட இப்புதுவருடத்தில், சிறுவர்கள், பெண்களின் அதீத பாதுகாப்பு எனும் வரம்பு சமூக மட்டத்தில் அதியுன்னதமாக்கப்படும்.

இன்னுமோர் விடயம் யாதெனில், ஊழல், இலஞ்சம், கடமை உதாசீனம், கலப்படம், மது, போதை, கொலை, களவு, காமம், வன்மம், பலாத்காரம், வேஷம் யாவும் இருபத்துநான்கு மணித்தியாலமும் கண்காணிக்கப்படும்.

எல்லாவற்றையும் மீறி, கூடவே சட்டத்தையும் மீறி பொய்யை - மெய்யாக்கி, மெய்யைப் - பொய்யாக்கி, குற்றவாளி - நிரபராதியாகி, நிரபராதி - குற்றவாளியாகி, அடாவடிகள் - நியாயமாகி, நியாயம் - அநியாயமாகி இப் புதுவருடத்தில் நடைபெறுமாயின், இவ் வருடத்திலேயே இயற்கை நீதிக்குத் தலைவணங்கி செய்தி சொல்லும்.

"விசுவாவசு" பெண்ணே விண்வரும் வாழ்த்தும்படி
பசுபோன்று பாலிக்குமாறு பலன் தருவாய் - திசையெங்கும்
வறுமைதனை ஓட்டி வயல்தனைச் செழிப்பாக்க
சிறுமைகண்டு பொங்கி வா!

பசுமாடு போன்ற ஒரு பாக்கியமான செல்வத்தை
விசுவாவசு வருடம் தரவேண்டுமெனக் கூவுவாய்!

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யூன் | 12 | வை | 29 | வியாழன் | திருஞானசம்பந்தர் |
| | | | | | திருநீலகண்ட யாழ்ப்பாணர் |
| யூன் | 29 | ஆனி | 15 | ஞாயிறு | மாணிக்கவாசகர் |
| யூலை | 03 | ஆனி | 19 | வியாழன் | அருளம்பலவர் தங்கம்மை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை ஊட்டும் வார்த்தைகளுக்கு தனி சக்தி உண்டு

– திரு ஆ.தா.இ. ஜெயபாலன் அவர்கள் –

உடல்நலக் குறைவால் எழுந்து நடமாட முடியாத நிலையில் இருப்பவர்களுக்கு நம்பிக்கை தரும் ஆறுதல் வார்த்தைகள் மருந்துக்கு இணையானவையாக கருதப்படுகிறது. மருத்துவ உலகமே பிரமிக்கும் வகையில் மிகவும் பலவீனமான நிலையில் இருந்தவர்களைக் கூட அன்பும் ஆதரவும் மீட்டெடுத்த சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றது. மருத்துவம் கைவிட்ட நிலையில் இருந்தவர்களைக்கூட நம்பிக்கையான அன்பான ஆறுதலான வார்த்தைகள் அவர்களைக் காப்பாற்றியுள்ளது.

எத்தகைய நோய்ப் பாதிப்புக்குள்ளாகி இருந்தாலும் (இந்த நோயால் நான் பாதிக்கப்பட மாட்டேன்) மனதில் நம்பிக்கை ஏற்படுமாக இருந்தால் அது மருந்தைவிட நோயாளியை வேகமாக குணமடையச் செய்யும். அதனால்த்தான் வைத்தியர்கள் முக்கிய பயிற்சியாக நோயாளர்களுக்கு தன்னம்பிக்கையூட்டும் பயிற்சிகள் அளிக்கிறார்கள்.

நோயாளர்களைப் பராமரிக்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் நோயாளிக்கு நம்பிக்கை தரும் வகையில் அவர்களின் நடவடிக்கை அமைந்தால் மனோதைரியம் ஏற்படும். அன்பூட்டும் வார்த்தைகளும் தென்பூட்டும் நடவடிக்கைகளும் நோயாளியின் பலவீனமான உடலுக்கு மருந்தைவிட வேகமாகச் செயற்படும் தன்மையுள்ளது. இதனைத்தான் ஆங்கிலத்தில் யூனிவேர்சல் ரெமிடி என்று கூறுவார்கள்.

பிரபஞ்சத்தில் சுழன்று கொண்டிருக்கும் நல்ல சக்திகள் நம் எண்ணங்களுக்கு அமைவாக நம்மை நோக்கிவரும். நம்மிடம் இருந்து வெளிப்படும் நல் வார்த்தைகள் அவைகளைப் பலப்படுத்தும் தன்மையுள்ளது. அதன்பின்பு செயலாகும். இதுவே பிரபஞ்ச இயக்கமாகும்.

நாம் ஒவ்வொருவரும் இதனைச் செயற்படுத்திப் பார்த்தால் எமக்கு நன்மை கிடைக்கும். அதேசமயம் எதிர்மறையாகப் பேசும் வார்த்தைகள் இதுபோன்ற இயக்கத்தையே தோற்று விக்கும் தன்மையுள்ளது. எம்மைச் சுற்றியிருப்பவர்கள் பேசும் நல் வார்த்தைகள் அவைகளைப் பலப்படுத்தும். அதுவே செயலாகமாறும். (இதுவே பிரபஞ்ச இயக்கம்) அதுவே மகிழ்ச்சியாக மாறும். அந்த மனமகிழ்ச்சி மனதிற்குள் அதிர்வலைகளை உண்டாக்கும். இந்த அலைகள் பிரபஞ்சத்தில் சுழன்று கொண்டிருக்கும் அதேபோன்ற அலைகளை ஈர்க்கும். அதுவே பன்மடங்காகும்போது அதற்கென சக்தி பிறக்கும். அந்த சக்தி நம் எண்ணங்கள் யாவற்றையும் பூர்த்தி செய்யும். விஞ்ஞான உலகத்தின் கருத்தாகும்.

படுக்கையில் இருக்கும் நோயாளிக்கு பல தேவைகள் இருக்கும். அதனால் அவர் பராமரிப்பவர்களை கூப்பிட்டுக்கொண்டே இருப்பார். தொடர்ந்து நோயாளி ஒருவரைப் பராமரிப் பவருக்கும் வெறுப்பேற்பட்டு அவர் கூப்பிடும்போதும் கேட்டும் கேளாத மாதிரியாக நடந்து

கொள்வார்கள். அதனால் குணமடைந்து வரும் நோயாளிக்கு தன்மீது வெறுப்பேற்படும். அதனால் வருத்தத்தின் ஆரம்ப நிலைக்கே செல்லநேரிடும்.

இதைத்தான் பராமரிப்பவர்கள் முக்கியமாக உணர்ந்துகொள்ள வேண்டும். எமது மனம்தான் எமது சகல துன்பங்களுக்கும் காரணம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

நோயாளிகளிடம் நன்கு உபசரிப்பு காட்டினால் அது நோயாளியின் உடல்நலத்தை விரைவாக மேம்படுத்த முடியும். நோயாளியின் நலனை விரும்புபவர்கள் நடந்துகொள்ளும் முறையில்தான் நோயாளியை விரைவாக நலம்பெறச் செய்யமுடியும்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளை நாம் பார்க்கப் போனாலும் அவர்களுடன் நாம் பேசும்போது நம்பிக்கையூட்டும் நல்வார்த்தைகளைப் பேசவேண்டும். மருத்துவமனையில் தங்கியிருக்கும் நோயாளர்கள் அந்த சூழ்நிலையில் மற்றவர்களைப் பார்த்து மன ரீதியில் பாதிப்படைந்து சோர்ந்த நிலையில் இருப்பார்கள். அந்த நேரத்தில் நோயாளிகளிடம் பேசும் நல்வார்த்தைகள் உற்சாகமூட்டி நலமடையச் செய்யும். தேவையற்ற வார்த்தைகள் பேசி மேலும் அவர்களைப் பலவீனப்படுத்தக்கூடாது.

நல்வார்த்தைகள் பேசுபவர்கள் எப்போதும் சந்தோசமாக இருப்பதுடன் மற்றவர்களையும் சந்தோசப்படுத்துவார்கள். கொடும் சொற்களும் கடும் வார்த்தைகளும் மற்றவர்களை துன்பத்துக் குள்ளாக்கும் என்பதை கடும் வார்த்தைகள் பேசுபவர்கள் உணரவேண்டும்.

ஒவ்வொரு குடும்பத்திலும் நல்வார்த்தைகளை நாம் பயன்படுத்தினால் அக் குடும்பம் சந்தோசமான குடும்பமாகவும் திடகாத்திரமான குடும்பமாகவும் வாழும். இதை நாம் ஒவ்வொரு வரும் புரிந்துகொண்டு வாழ்ந்தால் வாழ்க்கை எப்போதும் இன்பமயமானதாக இருக்கும்.

"நல்லதை நினைப்போம்; நன்மையைச் செய்வோம்"

---

## ஆசை

*கங்கையில் ஒரு வியாபாரி குளித்துக்கொண்டிருந்தான். அப்போது அழகான கைத்தடி ஒன்று மிதந்து வந்தது. அதை எடுத்துக்கொண்டு கரையை நோக்கி நீந்தினான் அவன். அப்போது ஒரு நீர்ச்சுழலில் மாட்டிக்கொண்டான். தப்பிக்கக் கடும் முயற்சி செய்தான். ஒரு வழியாகப் போராடி உயிர் பிழைத்தான். ஆனால் அந்தக் கைத்தடி எங்கோ நழுவிப் போய்விட்டது. கரைக்கு வந்த அவன் அழகான கைத்தடியை இழந்துவிட்டேனே என்று கதறினான். அங்கு இருந்த ஒரு துறவி, ஐயா, நீங்கள் குளிக்க வெறுங்கையுடன் வந்ததைப் பார்த்தேனே? இப்போது கைத்தடியை நழுவ விட்டதாகக் கூறுகிறீர்களே? என்று கேட்டார். வியாபாரி நடந்ததைக் கூறினான்.*

*துறவி சொன்னார், ஐயா உங்களைப் பார்த்தால் எனக்குச் சிரிப்பு வருகிறது. கங்கையில் கைத்தடி மிதந்து வந்தது. இப்போதும் அது மிதந்துகொண்டு போகிறது. அப்படி இருக்கையில் அது உங்கள் கைத்தடி என்று எப்படிக் கூறுகிறீர்கள்? அந்தக் கைத்தடியை இரண்டு நிமிடங்கள் தங்கள் கையில் வைத்திருந்ததனால் அது உங்களுடையது என்று உரிமை பெற்றுவிட்டீர்களா? வாழ்க்கையில் எதுவும் நிச்சயமில்லை. பிறக்கும்போது யாரும் எதையும் கொண்டு வருவதில்லை. இறக்கும்போதும் எதையும் கொண்டு போவதில்லை. ஆனால் வாழ்வில் பலவற்றை உரிமை கொண்டாடுகிறோம். நமது துன்பங்களுக்கெல்லாம் அதுதான் காரணம்.*

*ஒவ்வொரு மனிதனிடமும் ஒரு பலவீனம் உண்டு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...)

# திருக்கயிலாயம்

**– திரு வி. செல்வரத்தினம் அவர்கள் –**

யாத்திரிகர்கள் எல்லோரும் மானசரோவர் ஏரிக்கரைக்கு பரிக்ரமம் (வலம் வருதல்) செய்யும் பொருட்டு செல்கிறோம். நடந்து செல்வது மிகப்பெரிய கஷ்டம் என்றபடியால் குதிரைகளில்தான் போகவேண்டும். திபெத்தியர்கள் குதிரைகளை மானசரோவர் ஏரிக்கரையில் வைத்திருப்பார்கள். யாத்திரிகர்கள் தாங்கள் விரும்பிய குதிரையைப் பிடிக்கலாம். வலம் வரும்பொருட்டு குதிரைகளில் யாத்திரிகர்கள் ஏறவேண்டும். குதிரைகளில் ஏறுவதற்கு குதிரை உரிமையாளர்கள உதவி செய்வார்கள். யாத்திரிகர்களுக்கு வழிகாட்டியாக ஒரு திபெத்தியர் வருகிறார். அவரும் குதிரையில் ஏறுவார். அவர் இந்தி வடிவாகக் கதைப்பார். யாத்திரிகர்களில் அனேகருக்கு இந்தி நன்றாகத் தெரியும். இது பெரிய பிரயோசனமாக இருந்தது.

நாங்கள் குதிரைப் பயணத்தைத் தொடங்குகிறோம். குதிரை உரிமையாளர்கள் நடந்தே வருகிறார்கள். மேலும் இங்கு என்ன வேடிக்கையென்றால் யாத்திரிகர்களை அழைத்துப் போகிறவர்கள் ஆணா அல்லது பெண்ணா என்று கண்டுபிடிக்க முடியவில்லை. ஏனென்றால் ஆண்களுக்கு முகத்தில் மயிர் முளைப்பதில்லை. அத்துடன் ஆண்களும் இரட்டைப் பின்னல் தான் போட்டிருக்கிறார்கள். இரு பகுதியினரின் குரல்களும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. வழிகாட்டி பல விடயங்களை இந்தி மொழியில் கூறுகிறார். மானசரோவரின் தெய்வீக அழகை தரிசிக்க முடிந்தது. யாத்திரிகர்கள் குதிரைகளில் போய்க்கொண்டு "நமசிவாய" என்ற ஐந்தெழுத்தை சொல்லிக்கொண்டே வந்தார்கள். பயணத்தின் பின் ஒரு மணித்தியாலம் குதிரைகளை நிறுத்தி ஓய்வு எடுத்தார்கள். பாதை சரியில்லாதபடியால் குதிரைகளும் களைத்துப்போய்விட்டன. ஓய்வுக்குப்பின் அவரவர்கள் தங்கள் குதிரைகளில் ஏறினார்கள். மீண்டும் பயணம் தொடங்கியது. வழிகாட்டி சொன்ன குதிரைகளிலேயே ஏறிக்கொண்டார்கள். வழிகாட்டிகளில் ஒருவர் மாத்திரம் ஆண். மற்றையவர்கள் யாவரும் பெண்கள்தான்.

காலை நாம் மானசரோவர் பரிக்ரமம் தொடர்ந்தோம். வழியில் பல இடங்களில் "ஓம் மணிபத்மேற ஹீம்" என்ற மந்திரங்கள் பொறிக்கப்பட்ட கற்களை அடுக்கி எழுதி வைத்து இருப்பதை பார்க்கக்கூடியதாக இருந்தன. பின் இரு மணித்தியாலத்திற்குப் பின் ஓய்வுக்காக குதிரைகளிலிருந்து இறங்கி மானசரோவர் கரையில் புல்வெளியில் யாத்திரிகர்கள் படுத்திருந்து வழிகாட்டியுடன் பலவிதமான ஆன்மீகக் கதைகளைக் கதைத்துக் கொண்டிருந் தோம். பின் வழிகாட்டி மானசரோவர் ஏரியைப்பற்றிச் சொன்னார். இந்த ஏரி கடல் மட்டத் திலிருந்து 17,000 அடி உயரத்தில் மிகவும் அமைதியாக விளங்கும் மிகப் பெரிய ஏரியாகும். இதன் சுற்றளவு 54 மைல் ஆகும். ஆழம் 300 அடி. 200 சதுர மைல் பரப்பளவைக் கொண்டது. இந்த ஏரியை பிரதட்சணம் செய்ய மூன்று நாட்கள் தேவைப்படும். மானசரோவர் கரையை ஒட்டியே எங்களைக் குதிரைகளில் திபெத்தியர்கள் அழைத்துச் சென்றார்கள்.

*முதலில் சிந்தித்து பிறகு பேச வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் குதிரைப் பயணம் முழுவதும் மானசரோவரின் தெய்வீக அழகை யாத்திரிகர்களால் தரிசிக்க முடிந்தது. சுமார் ஒரு மணிநேர குதிரைப் பயணத்திற்குப் பிறகு யாத்திரிகர்கள் ஓய்வு எடுப்பதற்காக குதிரைக்காரர்கள் குதிரைகளை ஓர் இடத்தில் நிறுத்தினார்கள். யாத்திரிகர்கள் குதிரைகளில் இருந்து இறங்கி சற்று ஓய்வெடுத்துக் கொண்டார்கள். சுமார் பதினைந்து நிமிட ஓய்வுக்குப் பிறகு மீண்டும் குதிரைகளின்மேல் ஏறி எங்கள் பயணத்தைத் தொடங்கினோம். சுமார் ஒரு மணிநேரம் குதிரையில் அமர்ந்தபடியே மானசரோவரைப் பார்த்துக்கொண்டே செல்கிறோம். பிறகு மீண்டும் ஓய்வெடுப்பதற்காக ஓர் இடத்தில் குதிரைகளை நிறுத்தினார்கள். யாத்திரிகர்கள் அந்த ஓய்வு நேரத்தில் தாங்கள் எடுத்துச்சென்றிருந்த முறுக்கு, பிஸ்கெட், சொக்கிலேட், குளிர்பானம் போன்றவற்றை சாப்பிட்டார்கள். மேலும் வழிகாட்டிக்கும் கொடுத்தார்கள். பின் எங்கள் பயணம் தொடங்கியது. சில மணித்தியாலங்களில் நாங்கள் மொனாஸ்ட்ரி என்ற இடத்தைப் போய் அடைந்தோம்.

இங்கே திபெத்தியர்கள் வழிபாட்டிற்காக மானசரோவர் கரையில் பெரிய பெரிய கற்களை அடுக்கி வைத்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அவர்களின் மொழியில் "கொம்பா" என்றால் கோயிலாகும். அங்கே ஒரு புத்தர் கோயில் உண்டு. அந்தக் கோயிலுக்கு எல்லா யாத்திரிகர்களும் வழிகாட்டியும் போனோம். அங்கே "யாக்" எனப்படும் காட்டு எருமையின் நெய்யை வாங்கி புத்தர் கோயில் நெய்விளக்கு ஏற்றினோம். அன்று இரவு அங்கேயே தங்கினோம். அடுத்தநாள் காலை அங்கிருந்து மானசரோவர் பரிக்ரமம் தொடர்ந்த தோடு வழியில் பல இடங்களில் "ஓம் மணிபத்மேற ஹீம்" என்ற மந்திரங்கள் பொறிக்கப்பட்ட கற்களை அடுக்கி எழுதி வைத்திருப்பதையும் பார்க்கக்கூடியதாக இருந்தன. பின் இரு மணித்தியாலத்திற்குப்பின் ஓய்வுக்காக குதிரையிலிருந்து இறங்கி மானசரோவர் கரையில் புல்வெளியில் படுத்திருந்து வழிகாட்டியுடன் ஆன்மீகக் கதைகள் கதைத்துக்கொண்டிருந்தோம். பின் வலம் வரும் பயணத்தைத் தொடங்கினோம்.

மானசரோவர் கரையில் சில இடங்களில் பனி உறைந்து இருப்பதைப் பார்க்கக்கூடியதாக இருந்தன. இந்தப் பயணத்தின்போது சிறிய சிற்றாறுகளையும் கடக்க வேண்டியிருந்தன. ஆறுகளைக் கடந்தபடியால் குதிரைகளும் களைத்துவிட்டன. பின் ஓய்வுக்காக குதிரையிலிருந்து இறங்கினோம். இந்த இடத்திலிருந்து மறுகரையில் மானசரோவரின் கயிலாயத்தைக் கண்டு தரிசித்தோம். மானசரோவரின் தெய்வீகத் தோற்றத்தைப் பார்க்கக்கூடியதாக இருந்தது. பின் நாங்கள் எங்கள் குதிரைப் பயணத்தைத் தொடங்கினோம். தற்போது சரியான குளிராக இருந்தது. சரியாக ஒரு மணித்தியாலத்தின் பின் சுகுமொனாஸ்ட்ரி இடத்துக்கு வந்து சேர்ந்தோம். குதிரையிலிருந்து இறங்கியவுடன் சரியாக குளிராக இருந்தது. நாங்கள் எல்லோரும் அங்கிருந்த விடுதியில் உள்ள அறைக்குப் போனோம்.

அறையின் கண்ணாடி, யன்னல் வழியாக மானசரோவரைத் தரிசித்தோம். அடுத்தநாள் மானசரோவர் ஏரியை வலம் வரத்தொடங்கினோம். வழியில் பல இடங்களில் பல நிறமான பறவைகள் பறந்து கொண்டிருந்தன. மற்றும் சில இடங்களில் தங்கநிற அன்னங்கள், சாம்பல் நிற வாத்துக்கள் கூட்டம் கூட்டமாகப் போய்க்கொண்டிருந்தன. நாங்கள் போகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானசரோவரில் சென்று கலக்கும் பல சிறிய ஓடைகளும், சில சிற்றாறுகளையும் பார்க்கக் கூடியதாக இருந்தன. மானசரோவர் ஏரியின் அழகைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தோம். பின் சரியாக மூன்றுமணிபோல் நாங்கள் புறப்பட்ட இடத்தை வந்து அடைந்தோம். குதிரை உரிமையாளருக்கு அவர்களின் ஊதியத்தைக் கொடுத்தோம். மேலும் அவர்களுக்கு சன்மான மும் சொக்கிலேட்டும் கொடுத்தோம். அதேபோல் அவர்களின் உதவிக்கு நன்றிகூறிக் கொண்டோம். அவர்கள் மிகவும் சந்தோஷப்பட்டார்கள். (தொடரும்...

**சுவாமி மோகனதாஸ் அவர்களை நான்**
**மானிடராய்க் கண்டேன்!**

*செருப்பின்றிக் குடையின்றி உலகளந்து திரிவார் - சுவாமி*
*தேயாத நிலவாகக் கண்களுக்குத் தெரிவார்*
*நகையில்லை நட்டில்லை அழகொளிர நிற்பார் - சுவாமி*
*வகைதொகையாய் வாழ்வோற்கு உதவிபல புரிவார்!*

*பட்டில்லை பகட்டில்லை நீறோடு திரிவார் - சுவாமி*
*எட்டிடும் திசையெல்லாம் கொட்டும்கொடை கொடுப்பார்*
*மழையோடும் வெயிலோடும் மனம்போலத் திரிவார் - சுவாமி*
*ஏழை எளிய மக்களின் இடர்போக்கி மகிழ்வார்!*

*சொத்தில்லைச் சுகமில்லை ஞானிகள்போல் திரிவார் - சுவாமி*
*நித்தமொரு சொத்தாக அடியவரை நினைப்பார்*
*ஆற்றோரம் வீற்றிருப்போன் சாயலிலே இருப்பார் - சுவாமி*
*வேற்றுமைகள் பாராமல் அன்னமிட்டு மகிழ்வார்!*

*கண்டிப்பும் கடுமையும் உள்ளவர்போல் திரிவார் - சுவாமி*
*கண்கலங்கி நிற்போரின் கண்ணீரைத் துடைப்பார்*
*எண்ணரிய ஆற்றல்களின் புகலிடமாய்த் திகழ்வார் - சுவாமி*
*உண்பவர்கள் உண்டபின்னால் தானுண்டு மகிழ்வார்!*

*எனக்கென்றும் உனக்கென்றும் உதவிசெய்யத் திரிவார் - சுவாமி*
*தனக்கென்று எதையுமே தீண்டிடவும் விரும்பார்*
*கொடை கொடுக்கும் படையொன்றைப் பின்புலமாய்க் கொண்டார் - சுவாமி*
*மோகனதாஸ் அவர்களை நான் மானிடராய்க் கண்டேன்!*

*-மணியம்-*

*சிறந்த அறிவுரை விலைமதிப்பற்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியபுராணம்

# பூசலார் நாயனார் புராணம்

– திரு செ. சிவபாதம் அவர்கள் –

சிவபிரானது திருவருளால் நாயன்மார்களால் பாடப்பட்டதுதான் பன்னிரு திருமுறைகள் ஆகும். இத் திருமுறைகளின் இறுதிப்பகுதியாகவுள்ளது பெரியபுராணமாகும். இப் புராணத்துக்கு மாக்கதை திருத்தொண்டர் புராணம் என்னும் பெயர்கள் வழங்கப்படுகிறது. இப் புராணம் அறுபத்துமூன்று தனியடியார்கள் வரலாற்றையும் ஒன்பது தொகையடியார்கள் வரலாற்றையும் சொல்வது இப்புராணத்தை ஆக்கியவர் அருள்மொழித்தேவர் என்று கூறப்படும் சேக்கிழார் சுவாமிகளாவார். இவர் இரண்டாவது குலோத்துங்க சோழ ராசாவின் முதல் மந்திரியுமாவார் சிவபிரான் உலகெலாம் என்று அடியெடுத்து ஆரம்பித்துவிட இப் புராணத்தை பாடி சிதம்பரத் திலேயே தில்லை வாழ் அந்தணரும், சிவனடியார்களும் வேறும் பலர் கூடி இருக்கும் மண்டபத்தில் அரங்கேற்றம் செய்தவர் அப்போது சோழராசா இதற்கு பெருவிழா எடுத்துச் சிறப்பித்தார். தில்லை வாழ் அந்தணர்கள் நைவேத்தியம், தூப தீபங்களை இதற்குக் காட்டி மந்திரங்களைச் சொல்லி அர்ச்சனைசெய்து சிறப்பித்தார்கள். இப்புராணத்தில் பதினொரு சருக்கங்களும் 4286 பாடல்களும் உள்ளன. சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய திருத் தொண்டத்தொகை என்னும் பதிகத்தை முதல் நூலாகவும் நம்பியாண்டார் நம்பிகள் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியை வழிநூலாகவும் பின்பற்றி சேக்கிழார் சுவாமிகள் இப் பெரியபுராணத்தை ஆக்கியுள்ளார்.

எங்கள் சைவசமயம் வேதத்தை முதல்நூலாகக் கொண்டது. பண்ணின் பயன் இசை பாலின் பயன் சுவை கண்ணுக்குப் பயன் ஒளி கருத்துக்குப் பயன் திருவைந்தெழுத்து ஆகாயத்தின் பயன் மழை இவைகளைப்போல் வேதத்தின் பயன் சைவ சமயம் என்று சேக்கிழார் பாடியுள்ளார்.

பண்ணின் பயனாம் இன்னிசையும்
பாலின் பயனாம் இன்சுவையும்
கண்ணின் பயனாம் பெருகொளியும்
கருத்தின் பயனாம் எழுத்தைஞ்சும்
விண்ணின் பயனாம் பொழி மழையும்
வேதப் பயனாம் சைவமும் போல்
மண்ணின் பயனாம் அப்பதியின்
வளமும் சிறப்பும் வரம்புடைத்தோ.

மேலும் பல சிறப்புக்களையுடைய இப் பெரியபுராணத்தில் 63 தனியடியார்களின் வரலாறு சிறப்பாகக் கூறப்படுகிறது. இதற்குள் பூசலார் நாயனார் இறைபணிசெய்து முத்தி பெற்ற வரலாற்றைப் பின்வருமாறு கூறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*திருத்தொண்டத்தொகை*

மன்னியசீர் மறை நாவன்

நின்றவூர்ப் பூசல் அன்பன் அடியார்க்கும் அடியேன்.

*திருத்தொண்டர் திருவந்தாதி*

பதுமநற் போதன்ன பாதத்தாற்க்கு ஒரு கோயிலை
யான் கதுமெனச் செய்குவது என்று கொலாமென்று கண்துயிலாது
தன்மனத்தே யெல்லிதோறும் நினைந்தருள் பெற்றதென்பர்
புதுமணத் தென்றலுலா நின்றவூர் தனிற் பூசலையே.

*பொ-ரை:*

புதிய மலர் மணத்தை அளைந்த தென்றற் காற்று வீசுகின்ற திரு நின்றவூரில் அவதரித்த பூசலை நாயனார் செந்தாமரையை ஒத்த திருவடிகளையுடைய சிவபெருமானுக்கு ஒரு திருக்கோயிலை யான் விரைவாக கட்டிமுடிப்பது எப்போது கிடைக்கும் என்று உறங்காது இரவுதோறும் நினைத்து நினைத்து செய்து முடித்தார் என்று பெரியோர் கூறுவர்.

தொண்டை மண்டலத்திலே திருநின்ற ஊரிலே அந்தணகுலத்திலே பூசலார் நாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். இவர் சிவனடியாரிடத்தில் அன்புடையவராக வாழ்ந்தார். இத்துடன் வேதாகம முறைப்படி சிவபிரானுக்கு ஓர் ஆலயம் கட்ட நினைத்து இதற்குத் தேவையான பொருட்கள் பணம் ஆகியவற்றைத் தேடிக்கிடைக்காததால் வருந்தி எப்படியும் சிவனுக்கு ஓர் ஆலயம் அமைக்க வேண்டுமென்று சிந்தித்து மனத்தினாலே ஆலயம் கட்டிமுடிக்க வேண்டுமென்று துணிந்து தன் மனத்தினாலே ஆலய கட்டிடத்துக்கு வேண்டிய பொருட்களையும் தேடி சுபநேரத்திலே அடிக்கல் நாட்டி ஆலயத்தைக் கட்டி முடித்து மூலஸ்தானத்தில் சிவ லிங்கத்தை பிரதிஷ்டை செய்வதற்கு நல்ல நாளையும் அந்த சுபதினம் எப்போது வரும் என்று ஆலோசித்தவண்ணம் இருந்தார். பின்பு சுபதினத்தையும் தீர்மானித்தார். காடவராஜா வானவர் காஞ்சிபுரத்தில் ஒரு சிவாலயத்தைக் கட்டி முடித்து மூலஸ்தானத்தில் சிவலிங்கத் தைப் பிரதிட்டை செய்ய தீர்மானித்து சுபதினத்துக்கு முதல்நாள் சிவபிரான் பூசலார் நாயனாருடைய அன்பை உலகத்தவர்க்கு காட்டும் பொருட்டு அவ் அரசனுக்கு இரவிலே கனவிலே தோன்றி பின்வருமாறு சொல்லுவார்.

அன்பனே திருநின்ற பூசலார் என்னும் அந்தணர் நினைத்து நினைத்து கட்டிய ஆலயத்தின் பிரதிட்டை நாளைக்காகும். ஆதலால் யாம் நாளைக்கு அங்கு புகுவோம். ஆதலால் நீ இந்த இக்கோயிலில் செய்ய ஆரம்பித்த பிரதிட்டையை நாளைக்கு தவிர்த்து வேறு ஒரு நாளில் செய்வாயாக என்று கூறி கொன்றை மாலை சூடிய சிவபெருமான் பூசலார் கட்டிய ஆலயத்துள் எழுந்தருளச் சென்றார்.

நின்ற ஊர் பூசல் அன்பன்
நெடிது நாள் நினைந்து செய்த
நன்று நீடு ஆலயத்துள் நாளை
நாம் புகுவோம் நீ இந்த

*உண்மை எந்த நிறபேதத்திற்கும் அஞ்சாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிய செயலை நாளை ஒழிந்து
பின் கொள்வாய் என்று
கொன்றைவார் சடையார் தொண்டர்
கோயில் கொண்டருளப் போந்தார்

இறைவன் இப்படியாக கூறிவிட்டு மறைகிறார். அரசனுக்கு பெரிய ஏமாற்றம் அரசன்தான் காணும் எல்லோரையும் பார்த்து பூசலார் கட்டிய ஆலயம் எங்குள்ளது என்று கேட்க அவர்கள் தெரியாது தெரியாது என்று கூற அப்போது அரசன் ஊர் மக்களுடன் திருநின்ற ஊரை நோக்கிச் செல்கின்றான். அடுத்தநாள் உதயகாலத்தின்போது பிரதிஷ்டைக்கான கிரியை வழிபாடு ஒன்றும் நடைபெறாததைப் பார்த்து ஊர் மக்களைக் கேட்டபோது அவர்கள் பூசலார் ஒரு ஆலயத்தையும் இவ்வூரில் கட்டவில்லை. இவ்வூருக்கு மேற்கே உள்ள குளக் கரையில் இருப்பார் நீங்கள் எல்லோரும் சென்று அவரையே கேளுங்கள் என்று சொன்னார்கள். அப்படியே அரசனும் மக்களும் சென்று பூசலாரைக் கண்டு பெரியவரே நீங்கள் கட்டிய ஆலயம் எங்குள்ளது காட்டுங்கள் என்று அரசன் கேட்டார். அப்போது பூசலார் எமது ஆலயத்தில் இப்போது பிரதிஷ்டை நடந்து கொண்டிருக்கிறது என்றார். அரசன் எப்படி என்று கேட்டபோது பூசலார் அரசனைப் பார்த்து என்னையும் ஒரு பொருளாகக் கொண்டே சிவபிரான் திருவருள் செய்தார். அரசனே முன்பு நிதி எமக்குக் கிடைக்காத காரணத்தால் யான் மனத்தினாலே முயன்று நினைத்து நினைத்து கட்டிமுடித்த கோயில் இதுவாகும் என்று இக் கோயிலைப்பற்றி விரிவாகக் கூறினார். அரசன் கேட்டு மிகவும் அதிசயம் அடைந்து அவரைப் பலவாறு வாழ்த்தி தமது கழுத்து மாலை கீழே படும்படி நிலத்தில் வீழ்ந்து வணங்கி முரசுகள் முழங்க சேனைகளுடனும் தன் ஊர் மக்களுடனும் தமது ஊருக்குச் சென்றான்.

***குறிப்பு:***

நாட்டை ஆளும் அரசன் இறைவனைத் தவிர வேறு எவரையும் நிலத்தில் வீழ்ந்து வணங்குதல் முறை இல்லையாகும். இம் முறையை மீறி சிவனடியார் பூசலாரின் பாதத்தை தாழ்ந்து வீழ்ந்து வணங்கினான் என்றால் அவ்வரசனின் ஆணவ முனைப்பு இல்லாத பக்குவ நிலையையும் அடியாரின் பெருமையையும் இப்போது எல்லோருக்கும் தெரிகிறது.

அன்பராகிய பூசலார் தான் மனத்தினால் கட்டிய ஆலயத்துள் சிவபிரானை நல்ல சுபதினத்தில் பிரதிஷ்டை செய்து முடித்து தானே ஆலயத்தில் நித்தியம் ஞானமாகிய விளக்கை எரித்து இறவாத ஆனந்தமெனும் திருமஞ்சனம் ஆட்டி அன்பு என்னும் அமுது படைத்து நித்திய நைமித்தியக் கிரியைகளைச் செய்து சிதம்பர நடராசப் பெருமானின் குஞ்சிதபாதத்தின் நிழலை அடைந்தார்.

அன்பரும் அமைந்த சிந்தை ஆலயத்து அரனார் தம்மை
நன்பெரும் பொழுதுசாரத் தாபித்து நிலத்தினோடும்
பின்பு பூசனைகள் எல்லாம் பெருமையின் பலநாள் பேணிப்
பொன்புனை மன்றுள் ஆடும் பொன்கழல் நீழல்புக்கார்.

***துக்கத்தை மறக்கச் செயலில் ஈடுபட வேண்டும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய்மை குடிகொண்ட மனத்துடன் செய்யப்படுவனவே அறம். இதற்கு இலக்கியமாக வாழ்ந்தவர்தான் பூசலார் நாயனாராகும்.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து
அறன் ஆகுல நீர பிற.

எனத் திருக்குறளும் சொல்கிறது.

***திருமந்திரம் பாடல் 1823***

உள்ளம் பெரும் கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிவார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே.

சிந்தையிற் சிவனை காண்கின்ற பக்குவத்தை ஆழ்வார்களும் பின்வருமாறு சொல்லுகிறார்கள்.

உளன் கண்டாய் நன்நெஞ்சே உத்தமன் என்றும்
உளன் கண்டாய் உள்ளுவார் உள்ளத்து - உளன் கண்டாய்
வெள்ளத்தின் உள்ளானும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்தின் உள்ளான் என்று ஓர்.

நாமும் பூசலார்போல் எமது உள்ளத்தை தூய்மைப்படுத்தினால் எம்முடைய உள்ளத் திலும் சிவன் கோயிலாக வீற்றிருப்பான்.

## பாவங்கள் போக்கிடுவான்!

***பல்லவி***

*அருள் தரும் ஆறுமுகன் அமர்ந்த இடம்!*
*அன்பர்கள் தொழுதேத்தும் சந்நிதித் தலம்!*
*(அருள்)*

***அனுபல்லவி***

*வரும் அடியார்களுக்கு அவனே பலம்!*
*வண்ண மயில் மீதுவந்து தருவான் நலம்!*
*(அருள்)*

***சரணம்***

நாதியற்ற பேர்களுக்கும் நம்பிக்கை ஒளியாவான்!
நன்மை செய்தே நமக்கு நலங்களும் நல்கிடுவான்!
வீதி வலம் வந்தே காட்சி தந்திடுவான்!
வெற்றி வடிவேலனோ வினைகளை வேரறுப்பான்!
*(அருள்)*

காவடிகள் கரகங்கள் ஆடிவரக் களித்திருப்பான்
கற்பூர ஒளியினிலும் கலந்தே அவன் இருப்பான்
பாவடித்து அவன் புகழைப் பாடிடும் பக்தருக்கு
பாவங்களைப் போக்கிப் பதமலரை அளிப்பான்!

*-த. குலசேகரன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 95

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 முன்னாலே நிற்பவரால் எமக்கிடைஞ்சல் என்றிடும் நாம்
பின்னாலே நிற்பவற்கு இடைஞ்சலோ நாம் பார்க்க வேண்டும்
நாம் பிறர்க்கு இடைஞ்சலாக இருப்பதினை உணராமல்
பிறரெமக்கு இடைஞ்சலெனல் ஒற்றை வழிப் பயணமாகும்.

02 அறம்செய்ய விரும்பென்று பிறர்க்கிங்கு உரைத்திடும் நாம்
பிறர்க்கு அறம் செய்கிறோமோ என்றெண்ணிப் பார்க்கவேண்டும்
நாம்பிறர்க்கு அறம் செய்யா திருப்பதினை உணராமல்
பிறர்க்கு அறம் போதித்தல் ஒற்றைவழிப் பணயமாகும்.

03 ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க பிறரையிங்கு தூண்டிடும் நாம்
ஒழுக்கமாக வாழ்கிறோமோ என்றெண்ணிப் பார்க்க வேண்டும்
நாமொழுக்கம் தவறுவதை கிஞ்சித்தும் உணராமல்
பிறர்க்கொழுக்கம் கற்பித்தல் ஒற்றை வழிப் பயணமாகும்.

04 பிறர்தவறை பலபேற்கும் எடுத்திங்கு இயம்பிடும் நாம்
நம்மேலும் தவறுண்டோ என்றெண்ணிப் பார்க்க வேண்டும்
நம் தவறைத் தவறென்று நாமிங்கு உணராமல்
பிறர் தவறைப் பெரிதாக்கல் ஒற்றைவழிப் பயணமாகும்.

05 நம்பிள்ளை நலன்பேணி மகிழ்விக்க முயன்றிடும் நாம்
பிறர்பிள்ளை மனங்களையும் நோகாமல் பார்க்க வேண்டும்
பிறர்பிள்ளை மனங்களது நோவதினை உணராமல்
நம்பிள்ளை நலன்பேணல் ஒற்றைவழிப் பயணமாகும்.

06 நிம்மதியாய் வாழ்வதற்கு நினைத்திங்கு முயன்றிடும் நாம்
அடுத்தவரின் நிம்மதியைக் கெடுக்கிறோமோ பார்க்க வேண்டும்
அடுத்தவரின் நிம்மதியைக் கெடுப்பதைநாம் உணராமல்
நாம் மட்டும் அதைத்தேடல் ஒற்றைவழிப் பயணமாகும்.

*அருளின் மிக உயர்ந்த வடிவம் மௌனம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 நல்வாழ்வு வாழ்வதற்காய் நாளெல்லாம் உழைத்திடும் நாம்
பிறர் பிழைப்பைக் கெடுக்கிறோமோ என்றெண்ணிப் பார்க்க வேண்டும்
பிறர் பிழைப்பை கெடுப்பதைநாம் சிறிதேனும் உணராமல்
நாம் பிழைத்து நாம் வாழல் ஒற்றைவழிப் பயணமாகும்.

08 சுகவாழ்வு வாழ்வதற்காய் சுத்தமதைப் பேணும் நாம்
மற்றையோரின் சுகவாழ்வைக் கெடுக்கிறோமோ பார்க்க வேண்டும்
மற்றையோரின் சுகவாழ்வைக் கெடுப்பதை நாம் உணராமல்
நாம் மட்டும் சுகம் தேடல் ஒற்றை வழிப் பயணமாகும்.

09 சுடுவார்த்தை கேளாமல் இருப்பதற்கு முயன்றிடும் நாம்
பிறர் தம்மை வார்த்தைகளால் சுடுகிறோமோ பார்க்க வேண்டும்
வார்த்தைகளால் பிறரைநாம் சுடுவதினை உணராமல்
நல்வார்த்தை நாம் தேடல் ஒற்றை வழிப் பயணமாகும்.

10 நம்துன்பம் தீர்த்திட்டால் போதுமென்று இருந்திடும் நாம்
பிறர் துன்பம் உற நாங்கள் காரணமோ பார்க்க வேண்டும்
பிறருக்கு துன்பத்தைக் கொடுப்பதை நாம் உணராமல்
நம் துன்பம் தீர்க்க எண்ணல் ஒற்றை வழிப் பயணமாகும்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செந்திவேல் மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செந்திவேல் மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்ப நட நம்பி நடவாதே

– திரு முருகுப்பிள்ளை செல்லத்தம்பி அவர்கள் –

"என்னை எனக்கு அறிவித்தான் எங்கள் குருநாதன்
இணையடி என் தலை வைத்தான் எங்கள் குருநாதன்"

ஆண்டவன் உலகத்தைப் படைத்தான். உயிர் இனங்களை உருவாக்கினான். இந்த உயிரினங்கள் யாவற்றிலும் மனிதவர்க்கம் மாண்புமிகு பிறவியாக மண் உலகத்தில் மலர்ச்சி கொண்டு விளங்கி வரலாயிற்று. எண்ணங்களால் எட்டிக்கூட பார்க்கமுடியாத உயிரினங்கள் தோன்றியபோதும் அதில் மனிதகுலம் ஒன்றுதான் மண்ணுலகை வளப்படுத்தி வாழ்விக்கும் மகத்துவத்தைப் பொறித்து எழுந்து நிற்கின்றது என்றால் அது மிகையாகாது.

மனித குலம் இல்லையாகில் உலகம் என்றதொன்று உய்திகொள்ள முடியாது. உய்தி இல்லாத உலகத்தை உருவாக்கிய இறைவனும் உயர்வு அடையமுடியாது. எண்ணற்ற உயிர் வாழ் இனங்கள் தோன்றியபோதும் மனித குலம் மட்டும் உலக இயக்கத்திற்கு உறுதுணையாக இருப்பதற்கு அமையப் பெற்ற காரணம்தான் என்ன? அதுதான் நன்மை தீமை ஏற்றம் இறக்கம், உயர்வு தாழ்வு, சரி பிழை முதலிய மூலோபாயமாகிய உணர்வுகளை உள்ளடக்கமாய் கொண்ட படைத்தவனின் பார்வையில் இலக்காக கிடைக்கப்பெற்ற பகுத்தறிவு என்பது.

இந்தப் பகுத்தறிவை உணரப்பெற்ற மனித சஞ்சாரம் பார் முழுவதும் பலதரப்பட்ட பயன்பாடுகளையும் போற்றுதற்கரிய பெறுபேறுகளையும் முன்னெடுத்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதென்பது இலகுவான, காரணமான விடயம் அல்ல. "காலம் எனக்கொரு பாட்டெழுதும் காற்று வந்து இசையமைக்கும்" என்ற கருத்தியல்புக்கு சமய காலங்கள் அவகாசங்கள், ஆற்றல்கள், அனுபவங்கள் என்பனவோடு அன்பு, ஆசை, பண்பு, பாசம், பொறுமை, புரிந்துணர்வு, நேர்மை, நிதானம் முதலிய மனிதாபிமான உணர்வலைகள் எல்லோரிடமும் குடிகொண்டு இருக்கவேண்டும். உலகம் சமநிலை பெற்று உறுதியாய் வளர்ந்துவர வேண்டும். அப்போதுதான் இல்லாத உணர்வலைகளை உருவாக்கிய இறைவனின் இலட்சியம் இனிது நிறைவேறும்.

"இல்லறம் என்பது நல்லறம்" ஆகும். இதுவே வள்ளுவன் சொன்ன சொல்லாகும். ஒருவன் தன் இல்லற வாழ்வில் குடும்பசகிதம் ஒருங்கிணைந்த ஒற்றுமையோடும் நற்பண்போடும் வாழ்வை முன்னெடுக்க வேண்டும். அப்போதுதான் வாழ்வின் கனவு நனவாகி அண்டை அயலவர்களோடும் அகிலத்தாரோடும், அன்பின் அவசியத்தை அறிந்து நல்வாழ்வில் பங்கு கொள்ள முடியும். அகிலம் என்பது பல்வேறு அவலங்களுக்கு உள்ளாகி பல தரப்பட்ட மனிதர்கள் பலதரப்பட்ட இயல்புகளோடும், குணம் குறிகளோடும் வாழ்பவர்கள் வாழ்ந்து வருபவர்கள் உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் உதாசீனம் கொண்டவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லவர்போல் நடித்து வல்லவரோடு மாறி வாழ்நாளில் கடமையில் கண்ணியத்தில் இன்பத்தின் எழுச்சியை அபகரிக்க முயலும் சுயநலவாதிகள் பொதுநலத்தில் மௌனமாக இருந்துகொண்டு சுயநலத்தின் வழி பார்க்கும் வன்மை நெஞ்சம் படைத்தவர்கள். நாட்டுக்கொரு தொண்டர்போல் நடு நிலையில் நம்பிக்கை கொண்டவர்கள்போல் நற்குணமே நாட்டின் கொடைக் குணம் என நல்லுறவு கொள்பவர்போல் நிலை அற்ற வேசம் தாங்கி நாட்டையும் நல் மக்களையும் பாழ்படுத்த முயன்று நிற்பவர்கள். உள்ளதைச் சொல்ல மாட்டார்கள். நல்லது செய்யமாட்டார் கள். ஒருவருக்கு ஒருவர் ஒற்றுமையை வளர்க்க மாட்டார்கள். போட்டி, பொறாமை வளர்ந் தோங்கு பொல்லாத குணம் குறிகளுக்கு உள்ளாவர். பஞ்சமா பாதகங்களுக்கு உள்ளாகி பழக்கவழக்கங்களில் பாதிப்புக்களையே வளர்த்தெடுப்பர். கல்வி கலாசாரங்களைக் காண முடியாது. அதற்குப் பதிலாக காட்டுமிராண்டித்தனத்தையே கண் நிறையக் காண்பிக்கக் கூடியவர்கள். இதனால் நற்பிரஜைகள் நாட்டில் உருவாகுவதில்லை. நாளடைவில் நானிலமே நலிவுற்று பாழ்நிலமாக மாற்றம் கொண்டு படைத்தவனின் பார்வையை பலம் இழக்கச் செய்துவிடும்.

குறை ஒன்றும் இல்லாமல் நிறைவோடு மக்களை ஆண்டவன் பூமிக்கு அனுப்புவ தில்லை. இது உலக இயல்பு. குறைகளை நிவர்த்தி செய்து தன்னிடம் வா என்பதுதான் இறைவனின் பேரவா. இதற்காக பகுத்தறிவை பக்குவப்படுத்தாத பாமர மக்களையும் பண்பாடற்றவர்களையும் பகைத்தொழிப்பு செய்யாமல் அன்பையும் அறத்தையும் அள்ளித் தெளிக்கும்வண்ணம் அகிலம் முழுவதும் ஆன்மீகவாதிகளும் அருளாளர்களும் அரும்பெரும் அறிவாளிகளும் தோற்றம் பெற்றனர். இந்த நிலையில் எதற்கு மேல் உலகிலோ வேறெங்கோ எந்தவிதமான சக்தியோ வேறெதுவோ இருந்ததில்லை. இருப்பதும் இல்லை என்றால் அதுவே ஈடு இணையற்ற ஓம்வியல்பற்ற இறைமை என்றாகி விடுகிறது. இந்த இறைமை என்ற ஆண்டவனின் அரிய நெஞ்சில் சிறுதுளி வஞ்சம்கூட இல்லை. அவன் இன்றி எமக்கு வேறு ஆறுதலும் இல்லை. எனவே அந்த ஆண்டவனை நாம் அறுதியும் உறுதியுமாக நம்பியே ஆகவேண்டும். அப்படி நாம் நம்பித்தான் ஆகவேண்டும் என்றால் நமக்கும் ஓர் அறுதியும் உறுதியுமான அந்தஸ்தும் பொறுப்பும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் ஆண்டவனால் ஆட்கொள்ளப்படுவோம். அது அப்படி எனின் நாமும் ஊருக்கோ உல கினர்க்கோ எந்த உயர் குணங்களிற்கோ எந்த ஒரு இடர்பாடுகளோ குறைபாடுகளோ இல்லாமல் வாழ்ந்து வரவேண்டும். அப்படி வாழ்வதற்கே என்னை எனக்கு அறிவித்தான் எங்கள் குரு நாதன் இணை அடியை தலையில் வைத்தான் எங்கள் குருநாதன் என்று யோகர் சுவாமிகள் இறைவனின் அருள் மழையில் எம்மையெல்லாம் குளிக்க வைக்கின்றான். இதையே உலகம் ஆயிரம் சொல்லட்டுமே உனக்கு நீயே நீதிபதி என்று சொல்லப்படுகிறது. எனவே நாம் முற்றுமுழுதாக எம்மை நம்பியாக வேண்டும். இதைத்தான் அந்த ஆன்மீகவாதிகள் கூறிச் சென்றனர். அதுவே ஞானிகள் அடைந்த ஞானநிலைக்கும் வழிவகுத்தது. அதுதான் "நம்ப நட நம்பி நடவாதே" என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு நீயே நீதிபதியாகி உன் தூய நடைமுறையை மற்றவர்கள் நம்பும் அளவிற்கு மற்றவர் எவரையும் நீ நம்பி நடவாதே. இதுவே இறை அருளின் உபதேசம். ஆனால் இந்த உபகாரம் எனக்கு மட்டும் அல்ல. அடுத்தவருக்கும், அகிலம் முழுவதற்கும் இதுதான் போதனை. என்னை அடுத்தவர் முற்றுமுழுவதாக நம்பவேண்டும் என்று கூறுபவர் அந்த அடுத்தவருக்கும் அகிலத்தவருக்கும் கூறுவது என்னவென்றால் என்னையும் நம்பிவிடாதே என்றுதான். இதன் உண்மையான உட்கருத்து உட்பொருள் யாதெனில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் உள் உணர்வுகளை தூய்மையாக வைத்திருந்தால் தீமை என்ற ஒன்றை தினை அளவும் கொள்ளாமல் வாய்மை நெறிதனை ஓங்கி இவ்வையகம் தழைக்கும்.

## கந்தனுண்டு கவலை இல்லை மனமே

*கொக்கரக்கோ சேவல் ஒன்று கூவுது - அதைக்*
*கேட்டுக் கேட்டு மயிலும் நடனம் ஆடுது*
*காலை நேரம் குயிலும் கூடக் கூவுது - அது*
*குமரன் பெயரைச் சொல்லிச் சொல்லிக் கூவுது*
*கதிரவனும் மேலெழுந்து பார்க்கிறான் - தன்*
*ஒளியை வீசி அழகை மேலும் கூட்டுறான்.*

*(கொக்க...)*

*அலங்காரக் கந்தனவன் நல்லூரான் - நல்ல*
*அன்னதானக் கந்தனவன் சந்நிதியான்*
*அருளைக் கொடுக்கும் முருகன் அவன் திருநாமம் - அதை*
*சரவணபவ எனத்துதித்தால் அருள் சேரும்*
*கங்கைக் கரையில் அமர்ந்திருப்பான் கந்தனவன் - அவனைக்*
*கைதொழவே தேடிச் செல்வோம் கதிர்காமம்.*

*(கொக்க...)*

*ஆறுமுகன் திருவருளை வேண்டி நிற்போம் - அவன்*
*திருப்புகழை நாள்தோறும் பாடி நிற்போம்*
*உலகமெல்லாம் அவன் நாமம் ஒளிர்ந்திடவே - நாளும்*
*சரவணபவ எனும் நாமம் சொல்லிடுவோம்.*
*கந்தனுண்டு கவலை இல்லை மனமே - உனக்கு*
*சந்நிதியான் துணையுண்டு நிதமே.*
*முருகன் பெயரைச் சொல்லிச் சொல்லித் துதிபாடு - அவன்*
*காலடியை நம்பினோர்க்குப் பயமேது.*

*(கொக்க...)*

***-பொ. பாலேஸ்வரன்.***

***நல்லவனைக் கண்டுபிடி. நல்லவனாக நடிக்காதே.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# திருவடிப் பெருமை

– திரு செ. பாலச்சந்திரன் அவர்கள் –

திருநின்றியூர் என்னும் சிவஸ்தலத்தின்மீது ஆளுடைய பிள்ளையார் பாடிய தேவாரப் பாடலை நோக்குவோமாகில்,

"..... நின்றியூரில் நச்சம் மிடறுடையார் நறுங் கொன்றை நயந்தாளும் பச்சம்முடை யடிகடிருப்பாதம் பணிவாரே" என்று முடிக்கின்றார். இவ்வாறு எம்பெருமானின் திருப்பாதம் பணிபவர்க்கு அச்சம் இல்லை; பாவம் இல்லை; கேடும் இல்லை; நோயும் இல்லை என்று ஆணித்தரமாகக் கூறுகின்றார் ஞானக்குழந்தை. பாடலை முழுமையாக நோக்கினால்

திருச்சிற்றம்பலம்

அச்சமிலர் பாவம்மிலர் கேடும்மில ரடியார்
நிச்சம்முறு நோயும்மிலர் தாமுந் நின்றியூரில்
நச்சம்மிட றுடையார் நறுங்கொன்றை நயந்தாளும்
பச்சம்முடை யடிகடிருப் பாதம்பணி வாரே.

திருச்சிற்றம்பலம்

இத் திருப்பாடல் முதலாம் திருமுறையில் "நட்டபாடைப்" பண்ணில் இடம்பெற்றுள்ளது. மேலும் முதலாம் திருமுறையில் திருவடிச் சிறப்பை விளக்கும் பல தேவாரப் பாடல்களை நோக்கலாம். "திருநெடுங்களம்" என்னும் திருத்தலத்தின்மீது திருஞானசம்பந்த நாயனார் பாடிய பதிகம் இடர் களையும் பதிகம் என்று போற்றப்படுகின்றது. ஓவ்வொரு பாடலின் இறுதியிலும் ....இடர்களையாய் நெடுங்களமே யவனே என்று முடிவடையும். இப்பதிகத்தில் இடம்பெறும் "திருவடிப்பெருமைப்" பாடல்கள் சிலவற்றை நோக்கினால்,

".....பொன் அடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின் அடியார் இடர்களையாய் நெடுங்களமே யவனே"

என்று இப் பதிகத்தில் வரும் மூன்றாம் பாடல் இவ்வாறு முடிவடைகிறது. இத் திருப்பாட்டை முழுமையாக நோக்கினால்,

திருச்சிற்றம்பலம்

நின்அடியே வழிபடுவான் நிமலா நினைக் கருத
என் அடியான் உயிரை வல்வேல் என்ற ற்கூற் றுதைத்த
பொன் அடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின் அடியார் இடர்களையாய் நெடுங்களமே யவனே.

திருச்சிற்றம்பலம்

இப் பதிகத்தில் பல பாடல்களைக் கூறலாம். நாலாம் பாடலில் "....நின்தாள் நிழற் கீழ் நிலை புரிந்தார் இடர் களையாய் நெடுங்களமே யவனே" என முடிவடைவதை நோக்கலாம். இப் பாடலை முழுமையாக நோக்கினால்

*இளமையிற் சோம்பல் முதுமையில் வறுமை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

மலை புரிந்த மன்னவன்றன் மகளையோர்பால் மகிழ்ந்தாய்
அலை புரிந்த கங்கைதங்கும் அவிர்சடைஆ ரூரா
தலை புரிந்த பலி மகிழ்வாய் தலைவநின்தாள் நிழற்கீழ்
நிலை புரிந்தார் இடர்களையாய் நெடுங்களமே யவனே.

திருச்சிற்றம்பலம்

இவ்வாறு இப்பதிகத்தில், ஐந்தாம் பாடலின் இறுதியில், "....தலைவநின்தாள் நிழற்கீழ் நீங்கி நில்லார் இடர்களையாய் நெடுங்களமே யவனே" என்றும்,

ஆறாம் பாடலின் இறுதியில், "....ஆதிதேவன் அடியினையே பரவும் நிருத்தா கீதர் இடர்களையாய் நெடுங்களமே யவனே" என்றும்,

ஒன்பதாம் பத்தாம் பாடல்களில் முறையே,

"....கேழல் வெண்கொம் பணிந்தபெம்மான் கேடிலாப்பொன் அடியின்
நீழல் வாழ்வார் இடர்களையாய் நெடுங்களமே யவனே"

எனவும்,

"....துஞ்சலில்லா வாய்மொழியால் தோத்திரநின் அடியே
நெஞ்சில் வைப்பார் இடர்களையாய் நெடுங்களமே யவனே" என்றும் இடம்பெறுவதை நோக்கலாம்.

தலம்: திருப்பழனம் பண்: தக்கேசி

திருச்சிற்றம்பலம்

வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை யெருதேறிப்
பூதஞ்சூழப் பொலிய வருவார் புலியினுரிதோலார்
நாதாவெனவு நக்காவெனவு நம்பாவென நின்று
பாதந் தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே.

திருச்சிற்றம்பலம்

தலம்: கோயில் (சிதம்பரம்) பண்: குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

கற்றாங் கெரியோம்பிக் கயிலை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பல மேய
முற்றா வெண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

திருச்சிற்றம்பலம்

திருப்பழனம் என்ற தலத்தில் வெண்ணிற இடப வாகனத்தில் வெண் முப்புரி நூலைத் தரித்து வேதம் ஓதும் திருவாயையுடையவராய் பூதகணங்கள் சூழப் புலியின் தோலை அரைக்கசைத்துப் பொலிய வரும் இறைவனை நாதா! நக்கா! நம்பா! எனத் திரு வடியை தொழுது வணங்குபவர் அறிந்தோ அறியாமையாலோ செய்த பாவம் எல்லாவற்றையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்ப்பார். (பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார்) என முடிகிறது. இதேபோல கோயில் என்று போற்றப்படும் தில்லைக்கூத்தன் "பாதத்தை பற்றா நின்றாரைப் பற்றா பாவமே" என்று விளம்புவார்.

உலகம் சேமமாக இருக்கவேண்டும் என்பதற்காகத் தில்லைவாழ் அந்தணர்கள் தாம் கற்றவாறே நால்வேதம், அறங்களால் நித்தியாக்கினியோமம் செய்து இளம்பிறைச் சந்திரனைச் சூடிய முதல்வன் பாதத்தை பற்றியவர்க்குப் பாவம் பற்றாது என்று ஞானக்குழந்தை நவில்கின்றார். திருக்குறளார் கூறிய உலகமறையை ஒப்பு நோக்கினால்

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக
பற்றை விடற்கு" (திருக்குறள்)

(தொடரும்...

## சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்
என்ற தேவார வரிக்கு ஓர் எடுத்துக்காட்டு
மோகனதாஸ் சுவாமிகள்!
தமிழ் அன்னைக்கும், தமிழ் மக்களுக்கும்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் பரம்பொருளைப் பற்றிக்
கொண்டு தொண்டாற்றும் சற்குருவே
மோகனதாஸ் சுவாமிகள்!

பணிவும், இன்சொலும் அணியாகப் பூண்டு
கலாநிதியாகிக் கந்தன் கருணைக்கு
ஆளானவர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள்!

மண்ணிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
என்ற சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர்
புராண வரிக்கு இலக்கணமாகத் திகழ்பவர்
மோகனதாஸ் சுவாமிகள்!

என்கடன் பணிசெய்து கிடப்பதே என்ற
அப்பர் பெருமானின் தேவார வரிகளைத்தன்
உயிர் மூச்சு என்பதுபோலச் செயலாக்கிக் காண்பிப்பவர்
சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள்!

மனிதன் என்பவன் தெய்வமாகலாம்
வாரி வாரி வழங்கும்போது வள்ளலாகலாம்;;
என்ற சினிமாப்பாடல் வரிக்கும் இலக்கணமாகத்
திகழ்பவர்தான் மோகனதாஸ் சுவாமிகள்!

பட்டம் பெற்றோம் என்று தம்பட்டம்
செய்யாது நிறை குடமாய்,
பணியுமாம் என்றும் பெருமை என்ற
வள்ளுவர் வாக்குக்கு உதாரணம் ஆகத்
திகழ்பவர் மோகனதாஸ் சுவாமிகள்!

எந்நிதியும் தரும் சந்நிதி வேலவனே!
ஆற்றங்கரை அமர்ந்து அருளாட்சி செய்யும்
முருகப்பெருமானே!
பூவரசமரத்துப் புனிதனே!
என்றும் இன்பம் பெருகும் வண்ணம்
பணி புரியும் மோகனதாஸ் சுவாமிகள்
பணி தொடர அருள் புரிவாயாக!
சேவலும் மயிலும் போற்றி!
திருக்கை வேல் போற்றி! போற்றி!

-செல்வ. பாலச்சந்திரன்-

*வெற்றியோ தோல்வியோ நீ நல்லமுறையில் செயலாற்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளங்களும் வாழ்வும்

– *திரு இராம ஜெயபாலன்* அவர்கள் –

அசையாது ஒடுங்கிய பிரம்மத்துள்
அசைந்து இயங்கும் ஆற்றல்
திசைகள் நான்கும் தந்து திகழ்கின்ற
ஞாயிற்று ஒளியின் ஞானச்சுடர்
இசையால் பாடும் பாட்டு எங்கள்
பண்பாட்டின் மொழியின் வழிகள்.

இயற்கையின் இயக்கம் ஆக்கம் அழிவுக்குட்பட்டே சாத்தியமாகின்றது. ஆக்கம் அழிவு இன்றேல் இயற்கையின் இயக்கம் சாத்தியமே இல்லை. இதற்கான அறிவியல் காரணங்களைத் தெளிவாகப் பின்னர் தனிக்கட்டுரையில் பார்ப்போம். இவ்வாறு இயற்கையின் இயக்கம் ஆக்கம் அழிவுக்குட்பட்டு இடம்பெற்றாலும் இந்தப் பிரபஞ்சத்தில் நிலையாக இருக்கின்ற பொருள்களே ஆக்கம் அழிவுக்கு உட்படுவதால், படைத்த இறைவன் இல்லை என்றே நானும் ஆரம்பத்தில் நம்பினேன். ஆனால் படைப்பில் வளங்களின் முக்கியத்துவம் பற்றிய அறிவு ஏற்படாமையாலேயே இறைவன் பற்றிய அறிவு படிப்படியாக எனக்குள் ஏற் படத்தொடங்கியது. எவ்வாறாயினும் இறைவன் இல்லை என்று நிறுவுவதற்கே அறிவியலை ஆயுதமாக கையில் எடுத்தேன். காரணம் நான் ஆன்மீக சக்திகளை உணர்ந்துகொண்டமையால் மனிதர்களுக்கு இறைவனால் நேரடியாக அருள்புரிய முடியாது என நம்பியமையாகும். இதற்கான விஞ்ஞான விளக்கங்களைப் பின்னர் தனிக் கட்டுரையில் பார்ப்போம். இதன் காரணங்களால் ஆன்மீக சக்திகளாலே எமக்கு அருள்புரியக்கூடிய தெய்வங்களாக கருதி னாலும் ஆன்மீக சக்திகளில் எதிர்மறைச் சக்திகளும் இருக்கின்றன எனவும் நம்பவேண்டியும் இருந்தது. எவ்வாறாயினும் எனது நோக்கம் ஆன்மா அழியாது என்பதை நிறுவி அதன் மூலம் மனிதர்களை ஆற்றுப்படுத்துவதாகவே முதன்மையான நோக்கமாகவும் இருந்தது. ஆனால் அறிவியல் ரீதியாக, எனக்குள் எழுந்த கேள்விகளுக்கு ஆன்மீகத்தை அறிவியல் பூர்வமாக நிறுவுவதற்கான பதில் என்னிடமே இருக்கவில்லை. எனவே சுவாமி விவேகானந்தர் மற்றும் கண்ணதாசன் போன்றவர்களின் அனுபவங்களையும் அறிவுத் தேடல்களையும் எனது வாழ்வியல் அனுபவத்தோடும், அறிவுத்தேடலோடும் ஒப்பிட்டாய்வு செய்தாலும் பானைக் குள் இருப்பதுதான் அகப்பையில் வரும் என்பதுபோல் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கும் தனித்துவங்கள், ஒவ்வொருவர் வெளிப்பாடுகளிலும் உண்டு. தவிர வாழ்வியல் சூழ்நிலைகள் ஒவ்வொருவர் தேடல்களில் முக்கிய தாக்கங்களைச் செலுத்தியிருக்கின்றது. எவ்வாறாயினும் சொல்லவந்த செய்தியின் உள்ளார்த்தம் ஒன்றாக இருந்தாலும் சொல்லிய விதம் மாறுபடாது. மேலும் நான் எனது பாரம்பரியங்களின் தனித்துவங்களில் நின்றுதான் இந்த ஆய்வுப் பணியையும் செய்திருக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தவகையில் இயற்கைக்கு அதிபதியாக இறைவனையும், முன்னோர்களின் ஆன்மாக்களையே தெய்வங்களாகவும் வரையறை செய்து எனது ஆய்வுப் பணியைச் செய்தாலும். படைப்பில் வளங்களின் முக்கியத்துவமே இறைவன் பற்றிய தேடலில் முக்கிய அடிக்கல்லாகும். எனவே இறைவனே தனது மாயா சக்தியாய் படைப்பின் மூலங்களை உருவாக்கினார் என்பதை அறிவுபூர்வமாக நிறுவமுடிந்தது. தவிர ஆன்மீக சக்திகளை நிறுவுவதற்கு ஆதாரமாக புராண இதிகாசங்களை கட்டவிழ்த்து அதன் கற்பனைகளின் நோக்கங்களை புரியவைக்கக் கூடியதாகவே மீண்டும் கட்டமைத்து நம்பகத்தன்மை உடைய தாக ஆதாரபூர்வமாகவும் இன்றைய வாழ்வியல் சான்றாதாரங்களுடனும், மீண்டும் கட்டமைத்தும் காட்டியிருக்கின்றேன். எனவே எனது அறிவியல் முயற்சி தொடர்ச்சியானது, ஏற்கனவே ஞானச்சுடர் சஞ்சிகையில் படைப்பில் படிப்பினைகள் என்ற தலைப்பில் வளங்களின் முக்கியத் துவம் பற்றி ஆய்வு செய்திருக்கின்றேன். இந்தக் கட்டுரையும் மேலதிகமாக சில செய்திகளைச் சொல்லவேண்டியிருப்பதால் வளங்களும் வாழ்வும் என்ற தலைப்பில் எழுதியுள்ளேன்.

**சடப்பொருள்கள்**

இறைவன் அணுக்களைத் தனித் தனியாக உருவாகச் செய்தமையால் அணுக்கள் ஒன்றிடம் ஒன்று இணைந்தே சடப்பொருள்கள் உருவானது. எனவே அணுக்களின் இணைவு தான் படைப்பில் பல்வேறு வளங்களைத் தீர்மானிக்கும் காரணிகளாக அமைந்தது. இவ்வாறு சடப்பொருள்களும் ஒன்றிடம் ஒன்று இணைந்துதான் கோள்கள் உருவானது. இவற்றுக்கு அடிப்படையாக இருப்பது ஈர்ப்பு விசையாகும். இவ்வாறு அணுக்கள் மூலக்கூறுகளாகவும், மூலப்பொருள்களாகவும், நிலம் (திண்மம்) நீர் (திரவம்) காற்று (வாயு) என்கின்ற சடப் பொருளாகவும் நெருப்பு என்கின்ற சக்தியாகவும் இவை இயங்குவதற்கு அடிப்படையாக வெற்றிடமும் (ஆகாயம்) சேர்ந்து பஞ்சபூதங்களுக்குள் அடங்கியது. எனவே சடப்பொருள்கள் உயிரினங்கள்போல் வளராது பெருகாது நிலையாக இருந்தாலும் மாற்றங்களுக்கு உட்படக்கூடியது. தவிர இயக்கங்களுக்கும் உட்படக்கூடியது.

**உயிரினங்கள்**

ஒரு உயிர்கலமே பலவாகப் பிரிந்து உடலாக உருவானாலும், உயிரினங்களின் உயிர்கலங்களே உடலில் இருந்து வேறாகப் பிரிந்து உயிரினங்களின் இனப்பெருக்கம் இடம்பெற்றாலும் உயிரினங்கள் உருவாகி வளர்வதற்கும் உயிரினங்கள் இனத்தைப் பெருக்கு வதற்கும் இன்னுமொரு உயிர்கலமே உணவாகின்றது. அதாவது தாவரங்கள் மட்டுமே நேரடியாக பஞ்சபூதங்களில் தமது உணவைத் தயாரிக்க முடிந்தாலும், மற்றைய உயிரினங்கள் ஒன்றை ஒன்று உணவாக்கியே உயிர் வாழ்கின்றன. எனவே சடப்பொருள்கள் உருவாவதற்கு அணுக்கள் தேவைப்படுகின்றது. வளங்களின் முக்கியத்துவம் படைப்பில் தவிர்க்கமுடியாதவை ஆகின்றது. தவிர வளங்கள் பயன்படுத்தப்படுவதால் அவை இயற்கையில் இருந்து அழிவடைந்து செல்வதால் வளங்கள் இறைவனாலேயே, அவனது மாய சக்தியால் உருவாகச்

*உதவ முடியாவிட்டால் குற்றமில்லை. குற்றமில்லாமல் இரு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டிருக்கின்றது என்பது ஆதாரபூர்வமாக நிறுவப்படுகின்றது. மேலும் உயிரினங்கள் பூமியிலேயே வாழ்வதற்கு பூமியில் காணப்படும் வளங்களே முக்கிய காரணமாகும். முக்கியமாக பஞ்சபூதங்களில் நீரும் காற்றும் பூமியிலேயே இருப்பது முக்கிய சான்றாகும்.

**சக்தி**

சடப்பொருள்கள் இயங்குவதற்கு சக்தி தேவை. அதேபோல் சக்தியுருவாகின்றதற்கும் சடப்பொருள் தேவை. உதாரணம் மோட்டார் வாகனங்கள் இயங்குவதற்கு எரிபொருள் தேவை. இது நிலத்தின் கீழ் உள்ள பெற்றோலிய வளங்களில் இருந்து பெறப்படுகின்றது. சூரிய சக்தியைப் பயன்படுத்தியும் மோட்டார் வாகனங்களை இயக்கமுடியும். ஆனால் சூரியனில் இடம்பெறுகின்ற தொடர் எரிதலினால்தான் சூரிய சக்தி கிடைக்கின்றது. எனவே சூரியனின் தொடர் எரிதலுக்கு வளங்கள் தேவை இன்றியமையாதது. இந்த வளங்கள் முடிவுக்கு வந்தால் சூரியன் தனது எரிதலை நிறுத்திவிடும். இந்த இயற்கையின் இயக்கமே இல்லாது போய்விடும். எனவே சூரியனின் தொடர் எரிதல்தான் தன்னியக்க முறையில் இந்த ஞாயிற்றுத்தொகுதி இயங்குவதற்கு காரணமாக இருந்தாலும் படைப்பில் வளங்களின் முக்கியத்துவம் தவிர்க்கமுடியாதது என்பது உறுதியாகின்றது.

**ஒலிம்பிக் தீபம்**

ஒரு காலத்தில் உலகம் பல வல்லரசு நாடுகளின் ஆட்சியில் இருந்தது. ஒவ்வொரு வல்லரசுக்கு கீழும் பல சிறு நாடுகளும் இருந்தன. இவ்வாறு இருக்கின்ற காலத்தில் வல்லரசுகள் தத்தமது ஆட்சியதிகாரத்தை பரிசோதித்துப் பார்ப்பதற்கு பல நடைமுறை களைப் பின்பற்றின. இதில் ஒன்றுதான் இந்துக்களின் அஸ்வமேத யாகம். அதுபோல்தான் ஒலிம்பிக் தீபமும் இருந்தது. எனவே ஒலிம்பிக் தீபம் ஆளுமையின் அடையாளமாகவே இருந்தது. உதாரணம் சூரியனுக்கு கட்டுப்பட்டு கோள்கள் இயங்குவதாலேயே கோள்கள் ஒரு ஒழுங்கில் இயங்குகின்றன. உயிரினங்களும் பூமியில் வாழ்வதற்கும் சூரியனே முழுமுதல் காரணமாகவும் திகழ்கின்றது. அதாவது நாம் வேகமாக ஓடும்போது எமது உடலில் வெப்பம் ஏற்படுகின்றது. உடலில் ஏற்படும் இந்த வெப்பம்தான் சக்திக்கு அடையாளம். மேலும் எமது உடல் இந்த சக்தியை உணவின் மூலமே பெறுகின்றது. உதாரணம் குளிரான பிரதேசத்தில் அல்லது குளிரான காலத்தில் நாம் இருந்தாலும் எமது உடலில் வெப்பம் இருப்பதற்கு காரணம் நாம் உண்ணும் உணவாகும். தாவரங்களே ஒளித்தொகுப்பின்மூலம் சூரியனில் இருந்து வெப்பசக்தியை உணவில் உள்வாங்கி, எல்லா உயிரினங்களுக்கும் கிடைக்க வழி செய்கின்றது. தமிழர்கள் சூரியனைக் கடவுளாக வழிபடுவதற்கும் இது முக்கிய காரணியாக அமைகின்றது.

**பண்பாடுகள்**

இறைவன் அனைத்தையுமே கடந்தவன். இயக்கங்கள் தன்னியக்க முறையில் இயங்கினாலும் இறைவனால் திட்டமிட்ட ஒழுங்கிலேயே இடம்பெறுகின்றது. இவற்றுக்கு

*பொறுமைசாலிகளின் கோபத்திற்குப் பயப்படுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பில் இறைவனால் திட்டமிடப்பட்ட வளங்களே காரணமாகும். எனவே இறைவன் மொழியறிவியல்கள் கடந்தவனாகவும் ஞானமே உருவானவனாகவுமே திகழ்கின்றான். ஆனால் ஆன்மீகம் என்பது எமது வாழ்வின் பிரதிபலிப்பு எனவே மனித மொழியுருவாவதற்கு, இயல் இசை நாடகமும் சிற்பம் ஓவியம் சித்திரமுமே காரணங்களாகும். எனவே இந்து மதத்தினர், உருவங்களை வழிபடுவதற்கும், இசையாலும் மொழியாலும் இறைவனை வழிபடுவதற்கும், மொழியறிவியல் பரிணாமங்களே காரணமாகும். தவிர உலகில் இயற்கையை இறைவனாக வழிபடுவதும் இந்து மதத்தினர்கள் மட்டுமேயாகும். ஒரு திரு முருகன் வந்து உதித்தனை ஆங்கு உலகமுய்ய என்ற பாடலில் பிரம்மமே அடங்கியிருக்கிறது. எனவே முருகனுடைய தோற்றம், நெருப்புக்குளம்பாக இருக்கும் சூரியனில் இருந்து பூமியுருவானமையையும், பூமியில் உள்ள பஞ்சபூதங்களில் இருந்து உயிரினங்கள் உருவாகி, மனிதர்கள் பரிணாம வளர்ச்சியால் உருவானமையும், ஆரம்பத்தில் மனித இனம் நிலம் சார்ந்து வாழ்ந்தமையையும் ஒருங் கிணைந்து வரலாறுகள் உருவானமையுமே மிகவும் இரத்தினச் சுருக்கமாகச் சொல்வதுடன் கூடவே ஆன்மீக வழிபாடுகளையும் வரலாறுகளையுமே சொல்கின்றது. ஆனால் கிறீஸ்தவ மதம் கடவுள் (இறைவன்) மனிதனை தனது சாயலிலேயே படைத்ததாகச் சொல்வதனூடாக, கடவுள் மனித ரூபத்திலேயே இருக்கின்றார் என்று சொல்கின்றது. காரணம் படைப்புக்களிலே உயர்வான படைப்பு மனிதப்படைப்பேயாகும். எனவே மனிதர்களால்தான் ஒருவருக்கொருவர் ஒப்புரவாக வாழமுடியும் என்பதாகும். ஆனால் கிறீஸ்தவ மதத்தில் எந்தச் சமயப் பிரிவினருமே கடவுளுக்கு (இறைவன்) உருவமமைத்து வழிபடுவதில்லை. இந்தப் பூமியில் பிறந்தவர்களையே புனிதர்களாக கத்தோலிக்க மதம் போற்றுகின்றது. இந்து மதத்தில் வைணவ சமயத்திலேயே அவதாரக் கோட்பாடு உண்டு. ஸ்ரீ இராமபிரானே மனிதனாக காட்டப்படும் அவதாரமாகும். எனவே மனிதன் படைப்பிலே உயர்வானாலும் இயற்கையை விஞ்சிவிட முடியாது. அனைத் துக்கும் கட்டுப்பட்டு உட்பட்டே வாழ முடியும். எனவே மனிதனைவிட விஞ்சியது இயற்கை ஆகும்.

---

## உனது புகழ் தினம் பாட வேண்டும் முருகா

ஆற்றங்கரையானே ஆறுமுக வேலோனே - முருகா
போற்றி யுனைப்பாடப் பெரும் புண்ணியம் யான் செய்தேனே
நாற்றம் கொள் உடலால் பெரும் நாயலைச்சல் இல்லாமல்
ஏற்றம் பெறும் செயலில் ஈடுபட வைப்பாயே
வார்த்தை நிதானமும் வழுவாத நீதியும் தந்தே
சேற்றைப் பூசாதிருத்திச் சிவபதத்தை நாடவைக்க
காற்றை உள்ளீர்த்து விடுவதுபோல் கணப்பொழுதும் உனை மறவாமல்
நீற்றைத் தினம் அணிந்து நின்புகழைப் பாட வைப்பாய் வேல்முருகா.

***-சின்னப்பு தனபாலசிங்கம்.***

***சண்டையின்போது சத்தியம் அடிபட்டுப்போகிறது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்





வவுனியா கனகராஜன்குளம், பெரியகுளம் கிராமத்தில் வசித்துவரும் மாற்று வலுவுடைய குடும்பம் ஒன்றிற்கு காரைநகரைச் சேர்ந்த அமரர்களான தங்கராசா பத்மாவதி நினைவாக அவர்களின் குடும்பத்தினரின் 19,50,000 ரூபா நிதிப்பங்களிப்பில் ஆச்சிரமத்தின் ஒழுங்கமைப்பில் புதிய வீடு அமைத்துக்கொடுக்கப்பட்டது.

சித்திரை மாத ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்கள்



கொடுக்கும்போது கனிவு இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்திரை மாத ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்கள்



உற்ற சமயத்தில் உதவுவதே உண்மையான உறவு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வவுனியா - பிரமணாலங்குளம், வடகாடு ஸ்ரீ முத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலைக்கான புதிய கட்டடத்தினை 19,38,000 ரூபா செலவில் அமைத்துக் கொடுக்கப்பட்டது.



துன்பத்தை நீக்கிவிட்டு இன்பத்தை அடையமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






உடுத்துறை மகா வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக 240,000 ரூபா பெறுமதியான நிழற்பிரதி இயந்திரம் வழங்கப்பட்டது.

சங்கானை பிரதேச வைத்திய சாலையின் கோரிக்கைக்கு அமைவாக நரம்பியல் புனருத்தாபன பிரிவுக்குரிய பக்கவாத நோயாளிகளுக்கான சிகிச்சை இயன் மருத்துவருக்கு வேதனம் வழங்குவதற்காக ரூபா 70,000 வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வறுமைக்கோட்டின்கீழ் கல்வி கற்கும் 04 மாணவர்களுக்கு 172,000 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.





ஆடம்பர வாழ்வு அமைதிக்கும் பகையாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும்
சமுதாயப் பணிகளின் வரிசையில்
வறுமைக்கோட்டின் கீழ் கல்வி கற்றுவரும்
பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள்
சித்திரை மாத ஞானச்சுடர் மலர்
வெளியீட்டின்போது
வழங்கப்பட்டது.

கடன்படுதல் துயரத்தை வளர்ப்பதற்கு வழி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வண்ணார்பண்ணை ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் திருப்பணிச் செலவுக்காக 75,000 ரூபாவும், உடுவில் பிரஹரிஸ் இசை மன்றத்தின் கோரிக்கைக்கு இசை வாத்தியக் கொள்வனவுக்காக 75,000 ரூபாவும், இமையாணன் முதியோர் சங்கத்தினர்களின் அங்கத்தவர்களுக்கு மூக்குக்கண்ணாடி வழங்குவதற்காக 40,000 ரூபாவும், சுன்னாகம் அபிநயா கலைக்கழகத்தின் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான கலை நிகழ்வுக்காக 15,000 ரூபாவும் வழங்கப்பட்டது.






*சமுதாயத்தை உருவாக்கிடும் சிற்பிகள் தாய்க்குலம்தான்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அம்பாறை மாவட்டம், திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் கோரிக்கைக்கு அமைவாக 100,000 ரூபா பெறுமதியான 100 பெட் சீற்கள் வழங்கப்பட்டன.

யா/ அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்காக எழுதுபொருட்கள் வழங்கப்பட்டன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லைக் கூத்தனின் ஆடல் காண வாரீர் (தொடர்ச்சி...)

– *திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன்* அவர்கள் –

## தெய்வச் சேக்கிழார் பெருமான்

பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவி சேக்கிழார். பெரியபுராணம் ஓர் அன்புக்கடல். சேக்கிழார் அன்பர். அவர் அன்பை நினைந்து நினைந்து அன்பானவர்.

தொண்டை நாட்டில் குன்றத்தூரில் அருண்மொழித்தேவர் வேளாளர் குடியில் தோன்றியவர். அவரே குலோத்துங்க சோழ மன்னனின் அரசவையில் முதல் மந்திரியாக இருந்தவர். ஆண்டவன் அருளால் அவருக்குத் தெய்வப்புலமை விளங்கலாயிற்று. பெரியபுராணம் பாட எண்ணியதும் சிதம்பரம் சென்று ஆண்டவன் அருள் கேட்டு நின்றார். தில்லைக் கூத்தனே "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுத்தார். ஆண்டவனின் அருள் நாத ஒலி சேக்கிழாரை தெய்வப்புலவராக்கிப் பெரியபுராணத்தைப் பாடுவித்தது.

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

சேக்கிழாரின் உள்ளமாகிய ஊற்றினிடத்து தேங்கிய அன்பு நீர் பொங்கி எழுந்து அருவிகளாக வழிந்து, வழிந்து ஆறுகளாகப் பெருகிப் பெருகி ஓடி பெரியபுராணம் கடல் ஆயிற்று. பக்தியை உயிராகக்கொண்டு, பிறவற்றை உடலுறுப்புக்களாகக் கொண்ட காவியம். சரித்திரத்தை வித்தாகக்கொண்டு எழுந்த காவியம். சேக்கிழார் பெருமான் அயரா அன்பில் அரன் கழல் போற்றி மெய்யுணர்வு பெற்றவர். சிவமே பார்த்துப் பார்த்து தெளிவுபெற்ற சித்தர். சிதாகாசத் தொடர்புடையவர். அவருடைய சிவபக்தியும், சிவனடியார் பக்தியும் பெரியபுராணத்தைப் பாடவேண்டுமெனும் வேட்கையை உந்தின. சிதாகாசத்தில் நடம்புரியும் அண்ணலை நோக்கி; "சிவஞானச் செல்வர்களாகிய திருத்தொண்டர்களின் திறங்களை உணர்ந்து பாடத் திருவருள் வேண்டும்" என்று முறையிட்டார். அவர்தம் உண்மை முறையீடு, பொய்யன்புக்கெட்டாத பொற்பொதுவில் நடம் புரியும் ஐயன் திருச்செவிக்கெட்டியது. எட்டியதும் ஐயன் அருளால் "உலகெலாம்" என எம்பெருமான் அடியெடுத்துக் கொடுத்தார். சேக்கிழாருக்கும் திருவருளுக்கும் பழமைத் தொடர்பு ஏற்பட்டது. தெய்வத் திருவருட் சேக்கிழாராக்கியது. பெரியபுராணம் நாயன்மார் வரலாற்றைக் கூறும் அருள்நூல். சேக்கிழார் சிவன் பெருமையை, அச்சிவபிரான் அடியார்க்கு எளியனாக எழுந்தருளிய அருமையில் எளிய பெருமையை

*மன உறுதி இல்லாதவனுடைய உள்ளம் குழம்பிய கடலுக்கு ஒப்பானது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்குவதாலும், இதற்கு முன்னும் பின்னும் இதனையொத்த பெருமையுடைய நூல் தோன்றாததாலும் "பெரியபுராணம்" எனப் பாராட்டப்படுகிறது. சிவனடியார்கள் சீரஉரைத்து செந்தமிழை தெய்வ நிலைக்கு உயர்த்தியவர் சேக்கிழார்.

எந்நாட்டவர்க்கும் அருள் செய்யும் தென்னாடுடைய சிவன் உலகெலாம் பேரின்ப நெறியுணர்த்தும் பெருங்கதையை ஓதி உணர்ந்தால் உய்ந்திடலாம். கண்ணுதற் கடவுளாகிய சிவபெருமான் மனம், மொழி, மெய்களால் எண்ணியும் போற்றியும் தொண்டு செய்வோர் திருத்தொண்டர்கள் எனப் போற்றப்படுகின்றனர். திருத்தொண்டர்களின் வரலாற்றை திறம்படப் பேசுவது திருத்தொண்டர் புராணம். திருத்தொண்டர்கள் மாசில்லாதவர்கள். நிலை கலங்காது சிவன் சேவடி தம் சிந்தையில் நிறுத்தி நிறைவாய் வணங்குவர்.

ஓரறிவிலிருந்து ஆறறிவுள்ள சகல ஜீவராசிகளிலும் அணுவுக்குள் அணுவாக வீற்றிருக் கும் இறைவனையும், அவன் பெருமைகளையும் போற்றுகின்ற இந்நூலில் ஜீவகாருண்யத்துடன், சமத்துவமும் சகோதரத்துவமும் வலியுறுத்தப்படுகின்றன.

தேவாரம், திருவாசகம் என்பவற்றில் காணப்படாத ஒன்று மக்களுக்கு வேண்டிய கருத்துக்களை காப்பியத்தின்மூலம் சொல்லிய பெருமை சேக்கிழாருக்கே உண்டு. இறை தொண்டு, மக்கள் தொண்டின் பெருமையைச் சொல்வதே பெரியபுராணம். அடியார்கள் அன்னம் இடுதல் என்ற அறத்தை வாழ்க்கையின் மிகப்பெரிய குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தவர்கள். அந்த அறத்தை செய்வதற்கு முட்டுக்கட்டை ஏற்படுமாயின் உயிரை விடுவார்களேயொழிய அறத்தை விடமாட்டார்கள். எல்லா மதத்தினர்க்கும் பெரியபுராணம் ஒரு வழிகாட்டியாக அமைகிறது.

அறுபத்துமூன்று நாயன்மார்கள் வரலாற்றையும் மிக விரிவாக பக்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடியிருக்கிறார் சேக்கிழார் சுவாமிகள். உலகெலாம் உணர்ந்தோதற்கரிய சிவபெரு மான், அவர் உயிர்கள்மீது வைத்த பெருங்கருணையால், திருவருளையே திருமேனியாகக் கொண்டு, நங்கை பங்கராய் வீற்றிருக்கும் பேறு பெற்றது திருக்கயிலைமலை.

தடங் கருணைப் பெருங்கடலாகிய சங்கரன், கண்டாலும், நினைந்தாலும் சொன்னாலும் வீடுபேறளிக்கவல்லது தில்லை, திருவாரூர், காஞ்சி, திருவையாறு, திருவண்ணாமலை, சீர்காழி. 63வர் நாயன்மார்களுடைய திருமேனிகளைத் திருக்கோயில்களில் வைத்து வழிபடுவதன் நோக்கம், இவர்களின் வாழ்க்கையை நினைவில்கொண்டு இவர்களைப்போல வாழவேண்டு மென்பதற்காகவே சிவபெருமானிடமும், சிவனடியார்களிடமும் நிறைந்த அன்பு கொண்டவர்கள் தாம் பூசும் திருநீற்றைப்போலவே கள்ளங்கபடமற்ற வெண்மையான பரிசுத்த உள்ளம் கொண்டவர்கள். எப்போதும் கலங்கா மனமுடையவர்கள். நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் துயின்றாலும் என்றும் இறைவனை மறவாதவர்கள். பக்த சிகாமணிகள் தமக்கென விரும்பி மோட்சத்தையும் கேட்காத தம்முனைப்பற்ற வீரர்கள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அறுபத்து மூவரோடு ஒன்பது தொகை அடியார்களையும் திருத்தொண்டத்தொகை எனும் பதிகத்துள் பாடியுள்ளார். இப்பதிகத்தை முதலாகக் கொண்டு நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி என்ற வழிநூல் செய்து இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றை விளக்கினார். இவ்விரண்டையும் துணையாகக் கொண்டு சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணம் விரிவாக எழுதியுள்ளார்.

ஞானசம்பந்தர் தமிழிற்கும், தமிழ் நாட்டிற்கும், சைவத்திற்கும் சிவ வழிபாட்டிற்கும் செய்த பேருதவியைக் கருதி, சேக்கிழார் பெரியபுராணத்தில் பிள்ளை பாதி, புராணம் பாதி என சொல்லுமளவிற்கு பெரும்பகுதியை சம்பந்தருக்கே ஒதுக்கிவிட்டார். மிகப்பெரிய புரட்சி யாளரான சம்பந்தர் திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்ற அரிசனரை தம்முடனேயே யாழ் வாசிக்க வைத்திருந்தது. அவரையும், மனைவியையும் எல்லாக் கோயில்களுக்கும் அழைத்துச் சென்றிருக்கிறார். மூடநம்பிக்கை, சகுனம் பார்த்தல், இராகுகாலம் எல்லாவற்றையும் சம்பந்தர் சாடியிருக்கிறார்.

சுந்தரர் பரத்தையர் குலத்தில் பிறந்த பரவையாரை திருமணம் செய்கிறார். சிவவேதியர் குலத்தில் பிறந்தவர். பின்பு வேளாளர் குலத்தில் பிறந்த சங்கிலியாரை மணம் செய்தார். ஏழாம் நூற்றாண்டிலேயே சமுதாயப் புரட்சி செய்திருக்கிறார். இவற்றைச் சொல்லும் பெரு மையை சேக்கிழார் பெற்றார். பெரியபுராணத்தில் செய்யத்தகுந்தவை, செய்யத்தகாதவை எனும் இரண்டு மாபெரும் கோட்பாடுகளை எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. மக்களுக்குத் தொண்டு செய்தால் அது இறைவனைச் சென்றடையும்.

"நடமாடக் கோயில் நம்பர்க்கொன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே"

(திருமூலர்)

தேவாரப் பதிகங்கள் பாடித் தேவாரம் என்ற சொல்லையே உண்டாக்கியவர் அப்பர்.

"அஞ்சுவது யாதொன்றுமில்லை
அஞ்சவருவது மில்லை"

என்று மனித சமுதாயத்துக்கு அச்சம் தேவையில்லை என்றவர். உழவாரத்தொண்டு சென்ற இடமெல்லாம் செய்து மக்கள் தொண்டு செய்வது என்பதை முதலில் காட்டியவர் சம்பந்தர் அப்பரும் மக்கள் பணி செய்தார்கள்.

மக்களாகப் பிறந்தவர்கள் இறைவனை வழிபடுவது தலையாய கடமை என்பதையும், பிற உயிர்களுக்குத் தொண்டு செய்வது தம் கடமை என உணர தன்னலம் தானே விலகி விடும். மனிதன் ஆன்மீக வாழ்வில் ஈடுபட்டு பேரின்ப வாழ்வைப் பெறுவதற்கான நெறிமுறை களைக் காட்டுவதும், முன்னோர்கள் போற்றிவந்த நெறிமுறைகளை வாழ்வில் கடைப்பிடிக்கத் தூண்டுவதும், சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணத் துணைபுரிவதும் எனப்பல நிலைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது பெரியபுராணம். "தொண்டர் சீர்பரவுவார்" எனும் சிறப்புப் பெயரும் சேக்கிழாருக்கு உரித்தாயிற்று.

நூல் அரங்கேற்றம் சிதம்பரத்து ஆயிரங்கால் மண்டபத்தில் சித்திரைத் திங்கள் தொடங்கி அடுத்த சித்திரைத் திங்கள் நிறைவுபெற்றது. அரசன் இதில் பங்குபற்றி நிறைவு நாளில் இவரையும், இவரது நூலையும் யானையில் ஊர்வலமாகத் தானே சாமரை வீசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்து வந்து பலவிருதுகள் வழங்கிச் சிறப்பித்தான். பின்னர் சேக்கிழார் தில்லைத் திருத்தலத்தில் இருந்து வைகாசிப் பூசநாளில் சிவனடி அடைந்தார். உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் மூன்றாம் பிறைச் சந்திரன் உலாவுவதற்கிடமாய்க் கங்கைநீர் நிறைந்த சடையை உடையவனாயும், திருத்தில்லையில் திருச்சிற்றம்பலத்தினிடத்தே ஆனந்த திருக் கூத்து ஆடுகின்றவனாயும் உள்ள இறைவனுடைய எங்கும் நீக்கமின்றி மலர்கின்ற சிலம்பணிந்த திருவடிகளை வாழ்த்தி வணக்கம் செய்வோம். பெரியபுராணம் "உலகெலாம்" என்று தொடங்கி "உலகெலாம்" என நிறைவு பெறுகிறது.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
சென்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அவர் வான்புகழ்
நின்றது என்றும் நிலவி உலகெலாம்.
"சேக்கிழார் பெருமான் திருவடி சரணம்" (தொடரும்...

---

ஒரு ஆறு வயது சிறுவன் தன் நான்கு வயது தங்கையை அழைத்துக்கொண்டு கடை தெருவின் வழியே சென்றுகொண்டு இருந்தான். ஒரு கடையின் வாசலில் இருந்த பொம்மையைப் பார்த்து தயங்கி நின்ற தங்கையைப் பார்த்து, "எந்தப் பொம்மை வேண்டும்" என்றான். அவள் கூறிய பொம்மையை எடுத்து அவள் கையில் கொடுத்துவிட்டு ஒரு பெரிய மனிதனின் தோரணையுடன் கடையின் முதலாளியைப் பார்த்து "அந்தப் பொம்மை என்ன விலை" என்று கேட்டான். அதற்கு சிரித்துக்கொண்டே அந்த முதலாளி "உன்னிடம் எவ்வளவு உள்ளது" என்று கேட்டார். அதற்கு அந்தச் சிறுவன் தான் விளையாட சேர்த்து வைத்திருந்த அந்தக் கடற்சிப்பிகளை தன் பையில் இருந்து எடுத்துக் கொடுத்து "இது போதுமா" என்று கவலையுடன் கேட்டான். அதற்கு அந்தக் கடைக்காரர் அவனின் கவலையான முகத்தைப் பார்த்துக்கொண்டே "எனக்கு நான்கு சிப்பிகள் போதும். மீதியை நீயே வைத்துக்கொள்" என்று கொடுத்தார். சிறுவன் மகிழ்ச்சியோடு மீதி உள்ள சிப்பிகளோடும் தன் தங்கையோடு அந்தப் பொம்மையை எடுத்துக்கொண்டு சென்றான்.

இதை எல்லாம் கவனித்துக்கொண்டு இருந்த அந்தக் கடையின் வேலையாள் முதலாளியிடம் "ஐயா ஒன்றுக்கும் உதவாத சிப்பிகளை வாங்கிக்கொண்டு விலை உயர்ந்த பொம்மையைக் கொடுத்துவிட்டீர்களே" என்றான். அதற்கு அந்த முதலாளி "அந்த சிறுவனுக்கு பணம் கொடுத்தால்தான் பொம்மை கிடைக்கும் என்று புரியாத வயது. அவனுக்கு அந்த சிப்பிகள்தான் உயர்ந்தவை. நாம் பணம் கேட்டால் அவன் எண்ணத்தில் பணம்தான் உயர்ந்தது என்ற மாற்றம் வந்துவிடும். அதைத் தடுத்துவிட்டேன். மேலும் தன் தங்கை கேட்டவற்றை தன்னால் வாங்கித் தரமுடியும் என்ற தன்னம்பிக்கையை அவனுக்குள் விதைத்துவிட்டேன். என்றோ ஒருநாள் அவன் பெரியவனாகி இந்த சம்பவங்களை நினைத்துப் பார்க்கையில் இந்த உலகம் நல்லவர்களால் ஆனது என்ற நல்ல எண்ணம் அவன் மனதில் தோன்றும். ஆகையால் அவன் எல்லோரிடமும் அன்புகாட்ட தொடங்குவான். உலகம் அன்பினால் கட்டமைக்கப்பட வேண்டும்" என்றார்.

*தொடர்ந்து செய்யப்படாத முயற்சி தோல்வியையே தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்

– *திரு பு. கதிரித்தம்பி* அவர்கள் –

இறைவன் உலகங்களையும் உயிரினங்களையும் படைக்கின்றான். அவன் படைத்த உயிரினங்களில் ஆறறிவு படைத்த உயிரினமாக விளங்குபவன் மனிதன். அரிய பிறவியை எடுத்த மனிதன் "வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்" என்ற உண்மையை உணராது வாழ்கின்றான். வினைப் பிறவியை ஒழித்து வாழ வழி கண்டறியாது வாழ்க்கையை ஓட்டுகின்றான். வினை ஒழிந்தால் இறைவனை அடையும் வழிபிறக்கும் என்ற உண்மையை உணரவிடாது மலங்கள் தடுக்கின்றன. மலத்தை ஒழிக்க கோவில் சென்றுவர வேண்டும். இறையருளால் உண்மை நிலை தோன்றும். இதனால் முத்திநெறியை பெற்று இறைவன் அடி சேர்வான். எனவே மானிடராகிய நாம் கோவில் சென்றுவர வேண்டும்.

மனித வாழ்வுக்கு கோயில் முக்கிய இடம் வகிக்கின்றது. (ஆ+லயம் - ஆன்மா ஒடுங்கும் இடம்) இதை திருநாவுக்கரசு நாயனார் பாவினால்

திருக் கோயிலில்லாத திருவிலூரும்
திரு வெண்ணீறணியாத திருவிலூரும்
பருக் கோடிப் பத்திமையாற் பாடாவூரும்
பாங்கினொடு பலதளிகளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லாவூரும்
அருப்போடு மலர் பறித்திட்டுண்ணா வூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே.

கோயிலில்லா ஊரை சுடலைக் காட்டுக்கு ஒப்பானவை என அருளுகின்றார். இறைவனால் வினை ஒழிக்க பூமிக்கு வந்த மனிதன் வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம் என்று உணராது வாழ்கின்றான் எனக் கூறுகின்றான். கோவில் இல்லாதவூரில் குடி இருக்கவேண்டாமென பழமொழியும் உண்டு.

நமது யாழ் குடாநாட்டில் பல கோயில்கள் உள்ளன. அவைகள் தினந்தோறும் பூசிக்கப்பட்டு உள்ளன. அபிடேகம் நடைபெறுகின்றன. அபிடேகத்திற்கு பசுவின் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் சேர்க்கப்படுகின்றன. எனவே பசுக்களை தெய்வமாக மதித்து உணவு கொடுக்கவேண்டும். பசுவின் பால் சிறுவர் தொடக்கம் முதியோர்வரை குடிக்கின்றார்கள். பசுவின் சாணி தோட்டங்களுக்கு பசளையாக பயன்படுத்தப்படுகின்றது. எருதுகள் நிலம் உழவும் பொதிகள் ஏற்றிச் செல்லவும் உதவுகின்றன. மனிதனை வாழ வைக்கின்ற மாடுகளை பேணி, நன்கு உணவு அளிக்க வேண்டும். இதனால் சைவர்களாகிய

*அமைதியான மனம் மனிதன் அடையும் பெரும் பாக்கியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் தைப்பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல் வைக்கின்றோம். மாடுகளை நீராட்டி பொட்டு வைத்து வஸ்திரம் கழுத்தில் கட்டி பூமாலையும் அணிந்து, பொங்கல் சாதமும், பழமும் கொடுக்கின்றோம். நன்றி மறவாக்கடன் செய்த மனிதன் "வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்" என்பதை மறக்கின்றான். நாவுக்கரசர்

வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக் கடல் பசிநோய் செய்த பறிதான்
தாழா அறம் செய்மின் தடம் கண்ணான் மலரோனும்
கீழ் மேலுற நின்றான் திருகேதா நமனீரே. அருளியுள்ளார்.

இப் பாடலில் திருக்கேதாரத்தில் சிவன் சோதிப்பிழம்பாய் நின்று, நான் பெரியன் என்று சண்டை செய்யும் திருமாலுக்கும் பிரமாவுக்கும் அடியையும் முடியையும் காண்பவன்தான் பெரியவன் என அருளினார். திருமால் பன்றி உருவம் எடுத்து நிலத்தைக் குடைந்து சென்றார். பிரமா அன்னப்பறவை வடிவமெடுத்து, ஆகாயத்தை நோக்கிப் பறந்து சென்றார். இவர் செல்லும்போது தாளம்பூவும், முருக்கம்பூவும் பூமியை நோக்கி வந்து கொண்டிருந்தன. பிரமா இவைகளை வழிமறித்து நீங்கள் எங்கிருந்து வருகிறீர்களென வினவ அவை தாம் சிவன் முடியிலிருந்து வீழ்ந்து பூமியை அடைய வருகின்றோம் என்றன. இவற்றைக் கேட்ட பிரமா சிவன் இருக்கும் இடம் எவ்வளவு தூரத்திலுள்ளது என வினவ அவை வெகுதொலைவில் உள்ளது எனக் கூறின. நான் சிவனிடம் சென்று முடியைக் கண்டுவிட்டேனெனக் கூற நீங்கள் சாட்சி சொல்ல வேண்டுமெனப் பிரமா பணித்தான். பிரமா சிவனிடம் சென்று நான் முடியைக் கண்டுவிட்டேன். இவர்கள் எனக்குச் சாட்சி என்றான். அப்பொழுது சிவன் பொய் சொன்ன உனக்கு கோவிலில் இடமில்லை. அதுபோல் பொய் சொன்ன நீங்களும் எனது பூசைக்கு உதவா எனக் கூறினார். இதனால் கோயிலில் பிரமாவுக்கு இடம் இல்லை, சாட்சி சொன்ன பூக்களும் பூசைக்கு உதவா ஆகிவிட்டன.

கலியுகத்தில் விஞ்ஞானிகள் சந்திரன், செவ்வாய் ஆகிய கோள்களை ஆராய்ந்தவுடன் ஏனைய கோள்களையும் ஆராயத் தொடங்கிவிட்டனர். மனிதர்களும் வீட்டில் இருந்தவாறு வெகு தொலைவில் உள்ளவர்களுடன் அவர்கள் உருவங்களையும் பார்த்துக் கதைக்கத் தொடங்கினர். விஞ்ஞானிகளும் கடவுள் இருக்கிறான் என்ற உண்மையை உணர்ந்து. நாசா விஞ்ஞானிகள் சிதம்பரம் விஞ்ஞான மையம் அறிந்து சிவனை விஞ்ஞான கூடத்தில் வைத் துள்ளனர். வைத்தியர்களும் கடவுள் இருக்கிறார் என்ற உண்மையை உணர்ந்து, மாறாத நோயுடையவர்களை இறைவனை வேண்டும்படி கூறுகின்றனர். எமது இறைவன், கல்தோன்றா, மண்தோன்றா காலத்து முந்தியது. இதை அப்பர் சுவாமிகள் கைலாய திருப்பதிகத்தில் மூவாய், பிறவாய், இறவாய் போற்றி, முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றியென அருளியுள்ளார். ஐந்தாம் குரவராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் இறைவனை என்றும் உள்ளவர் எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர் எனக் கூறியுள்ளார். இறை நம்பிக்கை வேண்டும் மனிதனுக்கு கட்டாயம். அப்பொழுதுதான் மனிதன் "வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்" என்ற எண்ணம் தோன்றும். "தன் ஊன் பெருக்க பிற ஊன் உண்பவனுக்கு எவ்வாறு அருள்வரும்" என்ற உண்மையையும் வள்ளுவன் கூறுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் ஒரு தராசு

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

நாம் ஒருவருக்கு வணக்கம் செலுத்தும்போது எம்முள்ளே பணிவு பிறக்கின்றது. நிறைவு எழுகின்றது, மனம் மகிழ்கின்றது, எவையெல்லாம் மனதை மகிழ்விக்கும் நற் செயல்களோ அவை எல்லாம் பணபினுள் அடக்கம், சமயத்துள் அடக்கம். இவை இறை வனுக்குச் சமர்ப்பணம் என்கிறது எமது இந்து மதம்.

பணிவு, தியாகம், பொறுமை, புரிந்துணர்வு ஆகிய நற்பண்புகளை எந்த சமயமுமே ஒதுக்கியதில்லை. எல்லாச் சமயங்களுமே இப் பண்புகள் மனித வாழ்க்கைக்கு அவசியம் என தவறாது வலியுறுத்தி வருகின்றன. ஆனால் நாம்தான், இவற்றை எவ்வளவிற்கு கடைப்பிடித்து வருகின்றோம் என்பது கேள்வி!

எம்மிடம் பொறுமை இருக்குமானால், எச்சந்தர்ப்பத்திலும் பொறுமையை யாம் கடைப்பிடிப்போமேயானால், வாழ்க்கையில் வெற்றி எமக்கே. எமது மனதை நல்ல வழியில் செலுத்தப் பழகிக்கொள்ளுவோமானால், பொறுமை எம்மிடம் தஞ்சமே புகுந்து விடும். காரணம், பல சந்தர்ப்பங்களில் மனம்தான் எமது பொறுமையை யாம் இழக்க காரணமாக அமைகின்றது. "மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்" என்ற வாக்கு, கோடி பெறும்.

உதாரணத்துக்குப் பாருங்கள்! கப்பல் ஒன்று கடலில் சென்று கொண்டிருக்கின்றது. அலைகள் காற்றுக்கு ஏற்ப மோதி அக்கப்பலை அங்கும் இங்கும் அலைக்கத்தான் செய் கின்றன. ஆனால் கப்பலில் உள்ள காந்த ஊசியைப் பாருங்கள்.

அது மட்டும் எந்தக் காற்றின்போதும் எந்தத் தடுமாற்றமும் அடைவதாக இல்லை. ஒரே முடிவாக வடக்கிலேயே பதிகிறது. அதேபோன்று தான் எங்கள் எண்ணங்களை எச் சிலுசிலுப்புமில்லாமல் இறைவனின் பக்கமாகவே தொடர்ந்து செலுத்துவோமானால் இந்தப் பழக்கத்தால் எமது மனம் காந்த ஊசிபோல் சிறிதும் சலனம் அற்றதாகி தடுமாற்றமின்றி செயற்படும். இந்நிலை எமக்கு மன உறுதியையும் துணிவையும் தரும். இந்த உண்மையை தாயுமானவர் கூறுமாற்றைப் பாருங்கள்.

காந்தம் இரும்பைக் கவர்ந்து இழுத்தால் என்ன
அருள் வேந்தன் எம்மை இழுத்து
மேவுவனே பைங்கிளியே!

இது தாயுமானவர் சொன்னது.

எமது மனதுக்கு பொறுமை என்னும் ஆபரணத்தை மாத்திரம் நாம் அணிவித்துவிட்டால் பின் பிரச்சினையே இல்லை. எம்மை பதட்டப்படவோ அலைபாயவோ வைக்காது. அதே நேரம் பொறுமை என்பதும் தக்க சமயத்தில் இடம் அறிந்து, சந்தர்ப்பம் அறிந்து, கடைப்பிடிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியதொன்றாகும். நாம் எமது சூழலை இன்னமும் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை. என்பதற்கு நான் படித்த ஒரு கதையைக் கூறுகின்றேன்.

ஒரு பெரிய சந்தைக்கு அருகே ஒரு ஏழை நீண்டகாலமாக பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான். என்றுமே அவன் யாரையும் கூவி அழைத்து தொந்தரவு செய்ததில்லை. கைகளில் ஒன்றை மட்டும் நீட்டிக்கொண்டு நிற்பான். அவ்வளவுதான் பிரச்சினை தராத பிச்சைக்காரன். பாதையில் போவோர் வருவோர் ஏதாவது பணம் போட்டால் சரி. 40 வருட மாக அவன் அவ்வாறு பிச்சை எடுத்துக் கொண்டிருந்தானாம்.

ஒருநாள் அவன் திடீரென அந்த இடத்திலேயே இறந்து கிடந்தான். பாதையில் போவோர் வருவோர் அவனுக்கு அனுதாபம் காட்டினர். தொல்லை தராத அந்தப் பிச்சைக் காரனுக்கு அதே இடத்தில் சிலை ஒன்று எழுப்ப முடிவு செய்து, அந்த இடத்தைக் கொத் தித் தோண்டினர்.

அப்போது "ணங்" என்று ஒரு சத்தம் கேட்க மேலும் அந்த இடத்தை தோண்டிப் பார்க்க அங்கே ஒரு செப்புக்குடம் நிறைய தங்க நாணயம் கிடக்கக் கண்டனர்.

கூட்டத்தில் நின்ற ஒருவர் கூறினார். பார்த்தீர்களா! தனது காலுக்குக் கீழே இத்தகைய புதையல் இருந்தும் அதை அறியாத பிச்சைக்காரன் வருடக்கணக்காக பைசாவுக்காக கையேந்தி நின்று, ஈற்றில் செத்தும் போனானே என்றார் ஆதங்கத்தோடு. அப்போது அவ்வழியே வந்த துறவி ஒருவர் நடந்தவற்றை அறிந்ததும் கூறினார்.

இதே நிலைதான் எமக்கும், எமது மனதில் குவிந்திருக்கும் திறமையையும் மகிழ்ச்சி யையும் தெய்வத்தையும் நாம் உணராமல், புரியாமல், அது வெளியே இருப்பதாக எண்ணிக் கொண்டு எங்கெங்கெல்லாமோ அலைகின்றோம். இவ்வாறு அலைவதிலேயே எமது காலம் கழிகின்றது என்றார்.

கூட்டத்தில் இருந்தவர்கள் பின்புதான் தமது நிலை புரிந்து சிந்திக்க ஆரம்பித்தார்கள். எனவே இந்த வகையில் நாம் எங்கே உள்ளோம்? சற்று சிந்திப்போமா?

---

நாடு முழுவதிலுமே உள்ள கோயில்களுக்கும் சென்றேன். தீர்த்தங்களில் மூழ்கினேன் என்றெல்லாம் சொல்லிக்கொள்வதில் பயனேதுமில்லை. நமது உள்ளத்திலேயே இந்தத் தீர்த்தங்கள் எல்லாம் இருக்கின்றன. அவற்றில் முதலில் நீராடுவோம். அன்பு, எளிமை, அடக்கம், பக்தி, கருணை என்னும் நற்பண்புகள்தான் அந்தத் தீர்த்தங்கள். அந்தப் பண்புகளை வளரச்செய்து நாம் நல்லவர்கள் ஆகாமல் இறைவனுக்கு இதைச் செய்தேன், அதைச் செய்தேன் என்பதெல்லாம் அறியாமை.

உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்றாடார் வினைகெட
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வியிலாரே.

-திருமந்திரம்.

**தன்னை மதிப்பவன் பிறரையும் மதிப்பான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 100000. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| செ. கவிதா | லண்டன் (வல்வெட்டி) | 15000. 00 |
| சி. லக்ஷ்மன் | பருத்தித்துறை | 10000. 00 |
| திரு குமார் | கனடா | 7,34400. 00 |
| டனாஸ் | லண்டன் | 15000. 00 |
| சுசீலா நகை மாடம் | பருத்தித்துறை | தேங்காய், 1மூடை அரிசி |
| சி. தங்கவடிவேல் (சிற்றி வெதுப்பகம்) | தும்பளை | 1மூடை மா |
| சுந்தரம் மருந்தகம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| கவிதா தயாளசேகர் | ஜேர்மன் | 15000. 00 |
| ரவி லக்ஷ்மன் | கரணவாய் மத்தி | 5000. 00 |
| நா. குலேந்திரன் | சங்கானை | 10000. 00 |
| S. சுமதி (K.S. பொன்னம்பலம் எரிபொருள் நிலையம்) | கைதடி | 25000. 00 |
| S. சிவசந்திரராஜா | கைதடி | 2000. 00 |
| திரு ஞானவேல் குடும்பம் | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| ச. சத்தியசீலன் | லண்டன் | 4புட்டி அரிசி |
| திரு கார்த்திகேசுபிள்ளை குடும்பம் | சுவிஸ் | 15000. 00 |
| திரு சிவதாசன் குடும்பம் | கொழும்பு | 1000. 00 |
| திரு கேதீசன் குடும்பம் | வவுனியா | 5000. 00 |
| ரி. சுரேக்கா | லண்டன் | 2000. 00 |
| த. சதீஸ்வரன் | இணுவில் | 5000. 00 |
| திரு சிவாஸ் குடும்பம் | லண்டன் | 5000. 00 |
| திரு நடா குடும்பம் | வல்வெட்டி | 10000. 00 |
| க. நாகரத்தினம் | அச்சுவேலி | 1500. 00 |
| மா. தங்கவேல் | சுன்னாகம் | 5000. 00 |
| திரு செல்வராசா குடும்பம் | இணுவில் | 10000. 00 |
| திரு பாஸ்கரன் குடும்பம் | பருத்தித்துறை | 10000. 00 |
| ரா. அழகுராசா | கனடா | 1மூடை அரிசி |
| N. ரட்ணசிங்கம் | நீர்வேலி | 2000. 00 |

*சிரிப்பில் அடக்கமும் சிந்தனையில் தெளிவும் தேவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| திரு உதயசங்கர்மூலம் P. முருகதாஸ் | அவுஸ்திரேலியா | 66500. 00 |
| இ. ஞானம் | அளவெட்டி | 5000. 00 |
| இரத்தினசிங்கம் பிரதீப் | குப்பிளான் | 25000. 00 |
| செ. பொன்னுத்துரை | நீர்வேலி | 5000. 00 |
| சி. கணேஸ்வரன் | மல்லாகம் | 5000. 00 |
| சி. சொக்கலோகநாதன் | மல்லாகம் | 2000. 00 |
| ம. தர்சினி | கொடிகாமம் | 5000. 00 |
| J. ஆரியன் | கனடா | 20000. 00 |
| ந. விஜேந்திரா | உரும்பராய் | 15000. 00 |
| ஞா. கேமபாலன் | மட்டுவில் | 5000. 00 |
| பா. சிவதர்சன் | யாழ்ப்பாணம் 1மூடை அரிசி | 1000. 00 |
| திரு அப்பாத்துரை குடும்பம் | தெல்லிப்பழை | 75000. 00 |
| M. குமரன் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| மெ. கபீஷன், மெ. ரஜீசன் | நவுக்கிரி | 10000. 00 |
| சோ. அருள்ராஜா | நெல்லியடி | 10000. 00 |
| வி. கணேஸ் | உசன் | 7000. 00 |
| ஜெ. ஞானசுவேதா | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| கு. ஜெயலட்சுமி | திருநெல்வேலி | 5000. 00 |
| S. கேசவன் | கொழும்பு | 2000. 00 |
| வி. சாருஜன் | கொக்குவில் | 5000. 00 |
| திரு தயாபரன் குடும்பம் | தம்பசிட்டி | 5000. 00 |
| மோ. விதுஷா, சு. ராகவி | கரவெட்டி | 25000. 00 |
| த. ஸ்ரீஸ்கந்தராஜா | உடுப்பிட்டி | 10000. 00 |
| பு. சேந்தன் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| சுந்தரம் நினைவாக | தெல்லிப்பழை | 5000. 00 |
| திரு பகீரதன் குடும்பம் | திருநெல்வேலி | 50 பவுன்ஸ் |
| மு. திலக்ஷன் | நோர்வே | 5000. 00 |
| திரு சிவபாதம் குடும்பம் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| பொ. மகாலிங்கம் | மல்லாகம் | 5000. 00 |
| M. சாந்தமதி | வட்டுக்கோட்டை | 2000. 00 |
| P. அருட்செல்வன் | புலோலி | 5000. 00 |
| இ. தமிழ்ச்செல்வம் | லண்டன் | 20000. 00 |
| சி. சண்முகராஜா | சுன்னாகம் | 3000. 00 |
| ந. மகாலிங்கம், ம. பிரணவன் | நோர்வே | 15000. 00 |
| க. ரவீந்திரன், க. நேசன், த. தாரணி | மட்டுவில் | 20000. 00 |
| S. கண்ணன், K. சரவணன் | நல்லூர் | 25000. 00 |

அகங்காரத்தை விட்டவனுக்கு துன்பம் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பொ. ஜஜீந்திரன், ந. வினுஷன் | அச்சுவேலி | 15000. 00 |
| சுப்பிரமணியம் கிருபாகரன் | மல்லாகம் (கனடா) | 15மூடை அரிசி |
| பொ. சுப்பிரமணியம் | மல்லாகம் | மரக்கறி, 4மூடை அரிசி |
| ச. ஜெஸ்மிதன் | சங்கானை | 15000. 00 |
| லோ. சிவகுமாரன் | காங்கேசந்துறை | 10000. 00 |
| வி. தற்பரன் | கொழும்பு | 10000. 00 |
| ம. வேங்கை | கனடா | 5000. 00 |
| திரு ராசலிங்கம் குடும்பம் | பிரான்ஸ் | 5000. 00 |
| ஜெ. விஜி | கம்பர்மலை | 5000. 00 |
| த. சாந்தகுமார் | சங்கரத்தை | 15000. 00 |
| ஜெ. சயந்தன் | அச்சுவேலி | 10000. 00 |
| U. ஆருஷன் | அச்சுவேலி | 1000. 00 |
| ச. கனகலிங்கம் | சுன்னாகம் | 5000. 00 |
| பா. மகேஸ்வரி நினைவாக | லண்டன் | 40000. 00 |
| S. உருத்திரன் | நல்லூர் | 5000. 00 |
| திரு நிசாந்தன் குடும்பம் | அச்செழு | 1மூடை அரிசி |
| சி. நிருஷன் | மீசாலை | 1புட்டி அரிசி |
| சன்வே குறோசெற் ஸ்ரோர் | யாழ்ப்பாணம் | 1புட்டி பருப்பு, 10புட்டி அரிசி |
| கி. குகமணி | வதிரி | 1புட்டி அரிசி |
| க. மகாதேவன் நினைவாக | யாழ்ப்பாணம் | 25000. 00 |
| க. மனோகரன் | கனடா | 15000. 00 |
| திலகவதி பொன்னுத்துரை | மல்லாகம் | 3000. 00 |
| மா. குலசேகரம் | கோப்பாய் | 10000. 00 |
| இ. தேவகி | நியூஸ்லன்ட் | 10000. 00 |
| ஜெ. குகனருள் | அளவெட்டி | 10k பருப்பு, 6புட்டி அரிசி |
| திரு நடேசன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| ஐ. மதுஷன் | சங்கானை | 1000. 00 |
| ஜெ. சிந்துஜன் | சுவிஸ் | 1மூடை அரிசி |
| R. சாயினி | நல்லூர் | 2000. 00 |
| பூ. காண்டீபன் | மீசாலை | 7000. 00 |
| திரு ஜெயகாந்தன் | லண்டன் | 7புட்டி அரிசி 35000. 00 |
| திரு உதயகுமார் குடும்பம் | லண்டன் | மரக்கறி 1மூடை அரிசி |
| கு. விஜயன் | சண்டிலிப்பாய் | மரக்கறி, தேங்காய், 20k அரிசி |
| ச. கிருஷ்ணா | பருத்தித்துறை | 1000. 00 |
| சப்பறத் திருவிழா உரிமையாளர் | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| பா. அன்புச்செல்வம் | குடத்தனை | 5000. 00 |
| தி. சோபிகா | உடுப்பிட்டி | 25000. 00 |
| ஆ. சுபகா | மாவிட்டபுரம் | 10000. 00 |

*அன்பைவிட வலியசக்தி உலகில் எங்கும் இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| கெள. திவாகரி | இருபாலை | | 5000. 00 |
| ஞா. லாவண்யா | ஆவரங்கால் | | 1500. 00 |
| ந. நவநீதன் | உடுப்பிட்டி | 2புட்டி அரிசி | 2000. 00 |
| வ. துஷானி | கொக்குவில் | | 2000. 00 |
| ஸ்ரீ. தவமலர் | இமையாணன் | 1மூடை அரிசி | 10000. 00 |
| B. கனகேஸ்வரி | கனடா | | 5000. 00 |
| பா. துவாரகன் | சுன்னாகம் | | 1500. 00 |
| வே. ரத்தினவேல் | வவுனியா | | 1000. 00 |
| தர்மு நினைவாக | தொண்டைமானாறு | 1மூடை அரிசி | 5000. 00 |
| பி. ஜஸ்வர்ஜன் | வல்வெட்டி | | 5000. 00 |
| ச. யதுகுலன் | பருத்தித்துறை | | 5000. 00 |
| மு. அருவி | கனடா | | 5000. 00 |
| பே. நவகரன் | நல்லூர் | | 50000. 00 |
| வை. கிஷான் | இயற்றாலை | | 1000. 00 |
| சி. ரஜிஷன் | இயற்றாலை | | 1000. 00 |
| ச. யசோதரன் | காரைநகர் | | 1000. 00 |
| A. சிவநாதன் | அளவெட்டி | | 5000. 00 |
| யோ. ராஜேஸ்வரி | புன்னாலைக்கட்டுவன் | பருப்பு, தேங்காய், 1புட்டி அரிசி | |
| சி. சிவரஜனி | பிரான்ஸ் | | 10000. 00 |
| ரா. அக்ஷயன் | ஆனைக்கோட்டை | | 10000. 00 |
| சு. தவரஞ்சினி | கரணவாய் | | 6000. 00 |
| ந. நவகுமார் | மல்லாகம் | | 40000. 00 |
| தி. சண்முகநாதன் | இடைக்காடு | | 3000. 00 |
| இ. பாமினி | பண்டத்தரிப்பு | | 5000. 00 |
| வ. சின்னத்தம்பி | அல்வாய் | | 5000. 00 |
| நா. மங்களேஸ்வரி | கைதடி | | 2000. 00 |
| ந. கனகரெத்தினம் | சுன்னாகம் | | 2000. 00 |
| கி. நகுலதாஸ் | இருபாலை | | 2000. 00 |
| திருமதி ப. பார்த்தீபன், ப. ரஜனி | சுழிபுரம் | | 15000. 00 |
| மு. உருத்திரா | பருத்தித்துறை | | 15000. 00 |
| ஸ்ரீ. சுகந்தினி | சிறுப்பிட்டி | | 5000. 00 |
| செ. சண்முகநாதன் | சங்கரத்தை | | 10000. 00 |
| ந. கிருஷானந்தன் | சங்கரத்தை | | 1000. 00 |
| சந்துஜன் அட்சாயினி | பிரான்ஸ் | | 10000. 00 |
| ஆ. ஹரிஹரனி | பிரான்ஸ் | | 5000. 00 |
| பா. சுதாகர் | கோயிலாக்கண்டி | மரக்கறி, 1புட்டி அரிசி | 3000. 00 |
| S. பாலச்சந்திரன் | கொழும்பு | | 1000. 00 |
| ஏ. விவேகானந்தராஜா | உரும்பராய் | | 10000. 00 |

(தொடரும்...

*தானம் என்பது பிரதிபலன் கருதாத கொடை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...)

# திருப்புகழைக் கற்றார் கரையேறுவார்

– திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள் –



**(திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் விளக்க உரைகளிலிருந்து தொகுப்பாக்கம் செய்யப்பெற்றது)**

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள் போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

**திருப்புகழ் - வடமலை முருகன்மீது பாடப்பெற்றது**

சரவண பவநிதி யறுமுக குருபர
சரவண பவநிதி யறுமுக குருபர
சரவண பவநிதி யறுமுக குருபர எனவோதித்
தமிழினி லுருகிய அடியவ ரிடமுறு
சனன மரணமதை யொழிவுற சிவமுற
தரு பிணி துளவர மெமதுயிர் சுகமுற அருள்வாயே
கருணைய விழிபொழி யொரு தனிமுத லென
வருகரி திருமுகர் துணை கொளு மிளையவ
கவிதைய முதமொழி தருபவ ருயிர்பெற அருள்நேயா
கடலுள கினில்வரு முயிர்படு மவதிகள்
கலகமி னையதுள கழியவும் நிலைபெற
கதியு முனதுதிரு வடிநிழல் தருவது மொருநாளே
திரிபுர மெரிசெயு மிறையவ ரருளிய
குமரச மரபுரி தணிகையு மிகுமுயர்
சிவகிரி யிலும்வட மலையிலு முலவிய வடிவேலா
தினமுமுனது துதி பரவிய அடியவர்
மனது குடியுமிரு பொருளிலு மிலகுவ
திமிர மலமொழிய தினகர னெனவரு பெருவாழ்வே
அரவணை மிசைதுயில் நரகரி நெடியவர்
மருகனெ னவெவரு மதிசய முடையவ
அமலி விமலிபரை உமைய வளருளிய முருகோனே
அதல விதல முதல் கிடுகிடு கிடுவென
வருமயி லினிதொளிர் ஷடுமையில் நடுவுற
அழகி னுடனமரு மரகர சிவசிவ பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொழிப்புரை:**

முப்புரங்களை எரித்த சிவபெருமானுடைய புதல்வரே! திருப்போரூரிலும், திருத்தணிகையிலும் மிகவுயர்ந்த மகிமையுள்ள சிவகிரியிலும், திருவேங்கடமலையிலும் உலாவுகின்ற வடிவேலவரே! தினந்தோறும் உமது புகழைப் பரவுகின்ற அடியார்களின் உள்ளத்தில் குடிகொண்டு அருட்செல்வம், பொருட்செல்வம் என்ற இரண்டு செல்வங்களிலும் விளங்குபவரே இருள்மயமான ஆணவ மலம் நீங்க ஞான சூரியனாக வருகின்ற பெருவாழ்வே, பாம்பணையில் அறிதுயில் கொண்டவரும், நரகாசுரனை வதைத்தவருமாகிய நாராயணரது திருமருகன் என்று கூறும் அதிசயம் உடையவரே, பராசக்தியாம் பார்வதிதேவி பெற்ற முருகக் கடவுளே, அதல விதல முதலிய உலகங்கள் கிடு கிடு கிடு என்று நடுங்குமாறு வருகின்ற மயிலினில் ஒளிர்கின்றவரே, ஆறு கோணத்தில் நடுவில் அழகுடன் அமர்கின்றவரே, ஹர ஹர சிவ சிவ பெருமிதம் உடையவரே, சரவணபவநிதியே, ஆறுமுகா, குருபர என்று தமிழினில் துதிசெய்து உருகும் அடியார்களின் பிறப்பு, இறப்பு நீங்கவும், சிவப்பேறு பெறவும், நோய்கள் துள்ளி ஓடவும், எமது உயிர் இன்பமுறவும் அருள்புரிவீர். கண்களில் பொழிகின்ற கருணை உடையவரே, ஒப்பற்ற தனிப்பெரும் தலைவராம் யானைமுகவரது துணையை நாடும் இளையவரே, கவிதையாம் அமுதமழை பொழிகின்றவருடைய உயிர் நற்கதிபெற அருள்பவரே, கடல் சூழ்ந்த உலகினில் தோன்றுகின்ற உயிர்கள் படுகின்ற துன்பங்கள், கலக்கம் முதலிய இடர் அகலவும், நற்கதி நிலைபெறவும் தேவரீருடைய திருவடி நிழல் தருவதுமாகிய நாள் ஒன்று அடியேனுக்கு உண்டாகுமோ.

**விரிவுரை:**

சரம் - தர்ப்பை, வனம் - காடு, பவன் - வெளிப்பட்டவன்.

ரகரத்தின் பின்வரும் னகரம் ணகரமாகத் திரிந்துகொள்ளும் என்பது வியாகரண விதி.

சரவனம் என்பது சரவணம் என்று ஆயிற்று.

நிதி - இறைவன் என்றும் அழியாத சேம நிதி.

***தமிழினில் உருகிய அடியவர் -***

தமிழ் இனிமையான மொழி. இனிய தமிழில் இறைவனைத் துதி செய்தால் உள்ளம் உருகும்.

***சிவமுற -***

சிவத்துடன் இரண்டறக் கலக்கும் அத்துவித முத்தி.

***கருணைய விழிபொழி -***

முருகவேளின் கண்கள் கடல்போல் கருணை பொழியும்.

"கருணை பொழி கமல முக மாறும்" - திருப்புகழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***கடலுலகினில் வரும் உயிர்படும் அவதிகள் கழியவும் -***

முருகா உலகிலுள்ள எல்லா உயிர்களும் கவலையற்று வாழவேண்டும் என்று சுவாமிகள் வேண்டுகின்றார்.

***சமரபுரி - திருப்போரூர்***

இத் தலம் திரிபுராதிகளின் தந்தையான தாரகன் என்ற அவுணனுடன் முருகவேள் போர் புரிந்த இடம்.

***தினமுமுனது துதி பரவிய அடியவர் மனது குடிபுகும் -***

சதா இறைவனைப் பரவும் உத்தம அடியாரின் உள்ளக் கோயிலில் அப்பரமபதி வீற்றிருக்கிறான்.

"நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டவன்"

-அப்பர்.

"அடியவர் சிந்தை வாரிசு நடுவினும் உறைபவ"

-திருப்புகழ்.

***(ச) ஷருமையில் நடுவுற-***

ஆறு கரங்களும் அடங்கிய ஆறு கோணமான யந்திரத்தின் இடையில் முருகன் ஒளிமயமாக விளங்குபவன்.

**கருத்துரை:**

திருவேங்கடத்துறையும் தேவனே, திருவடி நிழல்பெற அருள்வாயே.

**தொகுப்பாக்கத்திற்கான குறிப்புரை:**

இளம் சந்ததியினரிடத்தே தெய்வீக ஈர்ப்பை உருவாக்கிக்கொள்வது மிகவும் தேவைப்பாடான விடயமாகும். ஆதலினால் தெய்வீக நம்பிக்கையை ஊட்டவும், பக்தி செய்வதற்குமான திறனை வளர்க்கவும் தேர்ந்த கருவியாக இத் திருப்புகழ்ப் பாடல்கள் அமைந்துள்ளன. எளிய சந்த ஓசை நயத்தை ஒவ்வொரு சொற்களும் ஒன்றோடொன்று இயைந்தமைந்து சொல்லிசைத் தூண்டலை ஏற்படுத்துகின்றன. இசையினூடாகச் சொற்களையும் அதன் அர்த்தத்தையும் உய்த்தறியும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ளுமிடத்து இறைவனுடனான ஈடுபாடு ஏற்படுவது இயல்பே. மேற்போந்த திருப்புகழில் அமைவது போன்று சர, வண, பவ, நிதி, யறு, முக, குரு, பர என்ற பதங்கள் (சொற்கள்) தற்காலத்தில் பெருவழக்கிலுள்ள துள்ளிசை மற்றும் சொல்லிசை (றாப் சோங்) வடிவத்திலும் பாடிப் பரவக் கூடியவாறு அமையப்பெற்றுள்ளது.

இத் தொடரின்பால் அடுத்த திருப்புகழாக இயமனுடைய பாசக்கயிற்றால் இவ்வுயிர் போகுந் தறுவாயில் முருகப்பெருமான் விரைவாக வந்து எனை மீட்டருளும்படியாக பழநியாண்டவரை வேண்டிப் பாடிய "கரிய பெரிய எருமை கடவு..." என்ற பாடலுடன் இத் திருப்புகழ்த் தொடர் அமையும்.

(தொடரும்...

***சரியானதைக் கண்டும் செய்யமுயடியாமை கோழைத்தனம்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை 60 காணும் அன்பன் பரமேஸ்வரன்



02.06.2025 திங்கட்கிழமை அகவை 60இல் கால் பதிக்கும் இளைப்பாறிய அதிபரும், சைவப்புலவருமாகிய திரு செ. பரமேஸ்வரன் அவர்கள்.

சந்நிதியான் ஆச்சிரமத்தோடு நீண்டகால தொடர்பில் உள்ளவரும், ஆச்சிரமம் ஆற்றும் பல சமய சமூகப் பணிகளிற்கு தன்னாலான பங்களிப்பை வழங்குவதோடு, தனது குடும்பத் தினரையும் இப் பணியின் ஊடாக இணைத்து பெருமைகொள்ளும் பெருந்தகையாளர்.

அவ்வகையிலும் பேரவையினால் ஆற்றப் படும் வாராந்த நிகழ்வின் வரிசையிலும், ஞானச் சுடர் மலர் வெளியீட்டிலும் பங்குபற்றி இந் நிகழ்வுகளை சிறப்பித்த ஒரு சிந்தனையாளர் ஆவார்.

அவரால் ஆற்றப்படும் பணிகள் யாவும் மென்மேலும் சிறக்கவும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழவும் சந்நிதி வேற்பெரு மானை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

–பேரவையினர்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனி மாத வாராந்த நிகழ்வுகள்

**06.06.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு:-** **"வாழ்வும் வழிபாடும்"**

**வழங்குபவர் :-** **திரு க. சரவணன்** அவர்கள்

[யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை மாணவன்]

---

**13.06.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**"இன்னிசை"**

**(பக்கவாத்திய சகிதம்)**

---

**20.06.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு:-** **"மகாபாரதம்" (தொடர்)**

**வழங்குபவர் :-** **திரு இரா. செல்வவடிவேல்** அவர்கள்

[ஆசிரியர்]

---

**27.06.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் ஆனி மாத வெளியீடு

**330 ஆவது மலர்**

**வெளியீட்டுரை:- திரு ச. வாகீசன்** அவர்கள்

[ஆசிரியர்]

**மதிப்பீட்டுரை:- திரு க. கைலைநாதன்** அவர்கள்

[ஆசிரியர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org